Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 88 | செவ்வாய்க்கிழமை 22 பெப்ரவரி 2022 | மாசி 10 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

# தலைவர் பிரபாகரன் எங்கே?

- பார்வதியம்மாவிடம் படையினர் ஏன் விசாரித்தனர்?
- ஆயுதங்களோடு யாரும் சரணடைவார்களா?
- பிரபாகரனுடையது எனக் காட்டப்பட்ட சடலத்துக்கு ஏன் டி.என்.ஏ பரிசோதனை செய்யவில்லை?

## கேள்விகளை அடுக்குகிறார் சிவாஜிலிங்கம்



**யாழ்ப்பாணம், பெப்ரவரி 22**

**‘பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தால் எதற்காக பிரபாகரனின் தாயாரிடம்’ பிரபாகரன் எங்கு இருக்கின்றார்?’ என விசாரணை செய்தீர்கள் என்பதற்கான பதிலையும் கூறவேண்டும். அல்ஜசீரா தொலைக்காட்சிக்கும் பிரபாகரனின் தாயார் இதனைக் கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சாவு தொடர்பில் அரசும், அரசில் உள்ளவர்களும் மாறுபட்ட கருத்துக்களையே கூறிவருகின்றார்கள். இதன் மூலம் போர்க்குற்றம் நடந்தது என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள். இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பண்பு தெரியாத வகையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றி வசைபாடி**

15

*வடமராட்சி மீனவர்களால்*

## பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

இந்திய மீனவர்களுக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று 10 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 3 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது.

15

## ஷானியின் உயிருக்கு அரசே பொறுப்பு

*எதிர்க்கட்சி அழுத்தம்*

கொழும்பு, பெப். 22

ஈஸ்டர் தாக்குதலுக்கு பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டவரைக் கண்டுபிடிக்க உரிய விசாரணை நடத்தி, துல்லியமான தகவலை அறிந்த ஷானி அபேசேகர உள்ளிட்ட ஏனைய அதிகாரிகளுக்கு

15




“அரசாங்கம் வெளிநாடுகளிட்ட பிச்சை எடுக்குது. எங்கட முதலாளிமார் ஆக்களை வைச்சு பிச்சை எடுக்கினம். அவ்வளவுதான் வித்தியாசம் மருங்கோ”

## மருத்துவமனைக்குள் புகுந்து மாணவன் மீது தாக்குதல்

*வவுனியாவில் சம்பவம்*

வவுனியா, பெப். 22

தாக்குதலில் காயமடைந்து, வவுனியா மாவட்ட மருத்துவமனையின் விபத்துப்பிரிவில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த பாடசாலை மாணவன்மீது, அத்துமீறி நுழைந்த 4பேர் கொண்ட குழு தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம்

15

## டெங்கு நோயாளர் அதிகரிப்பு மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாண மாவட்டம் உள்பட நாடு முழுவதிலும் டெங்கு நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலையில், டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது விசிறப்படும் 'ரெக்னிக்கல் மலத்தியோன்' எனப்படும் இரசாயனப் பொருளுக்கு பெரும் தட்டுப்பாடு

15

## சம்பளத்துக்காக யாசகம்!

*சாவகச்சேரியில் சிலர் நேற்றுக் கைது*

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி உரிமையாளர் ஒருவர், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை கூலிக்கு அமர்த்தி யாசகம் பெற்றுவருவதாகக் கிடைத்த தகவலையடுத்து, அண்மைய

15

## வாக்குவாதம் மோதலானது முல்லையில் ஐவர் காயம்

முல்லைத்தீவு, பெப். 22

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அளம்பில் பகுதியில் வாக்குவாதம் முற்றி, மோதலாக மாறியதில் 5பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 13பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15

## திருடப்பட்ட மோ.சைக்கிள் 12 மணிநேரத்தில் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 22

உரும்பிராயில் வீடு புகுந்து திருடப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை 12 மணி நேரத்தில் கண்டுபிடித்துள்ளதுடன் சந்தேகத்தில் ஒருவரையும் கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார்

13

கச்சதீவு உற்சவத்துக்கு

## இந்திய - இலங்கை பக்தர்களுக்கு அனுமதி

*வெளிவிவகார அமைச்சு தகவல்*

யாழ்ப்பாணம், பெப். 22

கச்சதீவு உற்சவத்துக்கு பக்தர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

15

# மின்துண்டிப்பு இன்றும் தொடரும்

கொழும்பு, பெப். 22

மின் உற்பத்தி நிலையங்களுக்கு போதியளவு எரிபொருள் கிடைக்கப் பெறாமையால் சுழற்சி முறை மின்துண்டிப்பு இன்றும் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாலை 4.30 முதல் இரவு 10.30 வரையான காலப்பகுதியினுள் சுழற்சிமுறையில் 2 மணித்தியால மின்வெட்டை நடைமுறைப்படுத்தவுள்ளதாக பொதுப்பயன்பாடு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னாநாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை- ஒரு சில பிரதேசங்களில் 3 மணி

14

*பெற்றோல் ரூ. 196, டீசல் ரூ. 173*

# எரிபொருள் வரிச்சலுகை கிடைக்காவிடின் விலை அதிகரிப்பு

## அமைச்சர் கம்மன்பில திட்டவட்டம் பல பகுதிகளிலும் எரிபொருளுக்கு மட்டுப்பாடு

கொழும்பு, பெப். 22

எரிபொருள் இறக்குமதி மீதான வரிகளை தற்காலிகமாக இரத்துச் செய்யாவிடின் ஒரு லீற்றர் டீசலின் விலையை 52 ரூபாவாலும், பெற்றோலின் விலையை 19 ரூபாவாலும் அதிகரிக்க நேரிடும் என வலுசக்தி துறை அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைமையில் எரிபொருளுக்கான வரி விலக்கு வழங்க வேண்டும் அல்லது எரிபொருளின் விலையை

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊதிய உயர்வு, நிரந்தர நியமனம் கோரி

# முன்பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்தில் குதிப்பு!



யாழ்ப்பாணம், பெப். 22

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரியும் நிரந்தர நியமனம் வழங்கக்கோரியும் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வடமாகாண ஆளுநர் அலுவலகம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் என்பவற்றுக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.



கடந்த 30 வருடங்களுக்கு மேலாகவும் அதற்கு உட்பட்ட காலப்பகுதியிலும் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றியிருந்தவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்படுகின்றது.

எனவே எமக்கு சம்பள உயர்வு தர வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளருமான செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களை நேரில் சந்தித்து அவர்களுக்குத் தமது ஆதரவை வழங்கினர். அதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலரிடம் முன்பள்ளி ஆசிரியர்களால் மனு கையளிக்கப்பட்டது. (ம-213-20-27-26)



# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு வாரத்தில் தீர்வு கிட்டும்

### ஆளுநர் உறுதி

வவுனியா, பெப். 22

முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு வழங்கப்படும் என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உறுதியளித்தார்.

சம்பள உயர்வுகோரி வவுனியா வடக்கு முன்பள்ளி ஆசிரியர்கள், வவுனியா பூங்கா வீதியில் உள்ள ஆளுநரின் பிராந்திய அலுவலகம் முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 'சாதாரண தொழிலாளியின் அடிப்படைச் சம்பளமான 13 ஆயிரம் ரூபாவைக்கூட எம்மால் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாம் பௌதிக வளப்பற்றாக்குறை, அரசியல் தலையீடு, அபிவிருத்தி பின்னடைவு, தனியார் பாடசாலைகளின் அதிகரிப்பு ஆகியவற்றால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம். எதிர்காலச் சந்ததியினர் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிப்பதற்கு முன்பிள்ளைப் பருவக்கல்வியே துணைபுரியும் என்பது திண்ணம்.

எனவே நாளைய சமூகத்தின் நலனில் அக்கறை கொண்டு, உரிய அதிகாரிகள் தீர்வு வழங்க வேண்டும்' என்று ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களை, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சந்தித்தார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு வாரத்தில் தீர்வு வழங்கப்படும் என்று அவர் கூறி உறுதியளித்தார். (ம-4-110-18)



## பிடியாணையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 22

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த ஒருவர் திறந்த பிடியாணையில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மோதலில் ஈடுபட்டார் என அவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் அவர் வழக்குகளுக்கு சமுகமளிக்காத காரணத்தால் மல்லாகம் நீதிமன்றால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-27)



## முன்பள்ளி ஆசிரியர்கள் முல்லையிலும் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, பெப். 22

நிரந்தர நியமனம் மற்றும் சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று கோட்டத்துக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்றுக் கவன வீர்ப்பில் ஈடுபட்டனர்.

'6 ஆயிரம் ரூபா போதாது, வேலைக்கேற்ற ஊதியம் வழங்க வழிசெய்யுங்கள், முன்பள்ளி ஆசிரியர்களின் வயிற்றில் அடிக்காதே, முன்பள்ளிக் கல்வி முக்கியம், முன்பள்ளி ஆசிரியர்கள் முக்கியமில்லையா?' உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்ட இடத்துக்கு வருகைதந்த முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம், முன்பள்ளி ஆசிரியர்கள், தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர். (ம-4-246)

## சட்டவிரோத மது விற்பனை சந்தேகநபரொருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 22

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுவை தீவுப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட நபர் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த பகுதியில் மதுபான போத்தல்கள் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுகின்றன என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் படி சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ய-125)

## ஆறு மாதங்களாகத் தேடப்பட்டவர் புலனாய்வுப் பிரிவினரால் கைது

யாழ்ப்பாணம், பெப். 22

வன்முறைகளில் ஈடுபட்டு 6 மாதங்கள் தலைமறைவாகியிருந்த இளைஞர் ஒருவர் யாழ். பொலிஸ் புலனாய்வுப்பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த 22 வயதுடையவரே இவ்வாறு நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (ய-26-27)

## சைக்கிள்கள் பல திருட்டு; 3 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப். 22

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக இடம்பெற்ற சைக்கிள் திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து திருடப்பட்ட நான்கு சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது மூவரையும் தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்துள்ளார். வழக்கு எதிர்வரும் 28ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர விவகாரத்தில் ஞானசாரரின் தலையீடு ஏன்?

## அருட்தந்தை மா.சக்திவேல் விசனம்



**வவுனியா, பெப். 22**

**திருக்கேதீச்சர மாதா சொரூப விவகாரத்தில், ஞானசார தேரர் தலையிடுவதைத் தவிர்க்க, மன்னார் ஆயர் உள்ளிட்ட கத்தோலிக்க மற்றும் இந்து மதத் தலைவர்களும் பேச்சில் ஈடுபட்டு, சமய நல்லிணக்கத்தை உறுதி செய்தல் வேண்டுமென்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட் தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் இந்துக்களுக்கும், கத்தோலிக்கர்களுக்குமிடையே சமய முறுகல் நீண்டகாலமாக தொடர்ந்துவரும் நிலையில், தற்போது திருக்கேதீச்சர ஆலயத்துக்குச் செல்லும் வழியில் வைக்கப்பட்டுள்ள சொரூபப் பிரச்சினை தொடர்பாக, ஒரேநாடு ஒரே சட்ட செயலணியின் தலைவர் ஞான சார தேரர் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும். ஏற்கனவே மடு தேவாலயம் காணிப்பிரச்சினை ஒன்றில் இந்து மக்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்க முயற்சிப் பதையும் நாம் அறிவோம்.

பௌத்த துறவிகளையும் பௌத்தர்களையும் அதிகமாகக் கொண்ட தொல்பொருளியலாளர்கள் வடக்கு- கிழக்கில் இந்துக்களின் பூர்வீக வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமித்து சிங்கள பௌத்த மயமாக்குவதை எதிர்க்காதவர், போர்க் காலத்தில் சமயத் தலங்கள் மீது வீசப்பட்ட குண்டுகளால் சேதமடைந்த வணக்கத் தலங்கள் தொடர்பிலும், அங்கு கொல்லப்பட்டவர்கள் விடயத்திலும் வருத்தம் தெரிவித்து நீதியைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்காதவர், கேதீச்சர விவகாரத்தில் இந்துக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கப் போகிறேன் என்பது அரசியல் உள்நோக்கம் கொண்ட கபடச் செயலாகும்.

அரசியல் ரீதியாக தமிழர்கள் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்துகின்ற காலகட்டத்தில், தமிழர் தாயகத்தில் ஞானசார தேரர் போன்ற சமய மற்றும் இனத் துவேஷம் கொண்டவர்கள் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தோடு சமயப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்கவும் இடமளிப்பது தமிழர்களின் எதிர்காலத்தைப் பாதிப்பதாகவும் அமைந்து விடும் - என்றார். (ம-4-110)

# அமைச்சரின் செயல் அருவருக்கத்தக்கது

## மக்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தையடுத்து, சுப்பர் மடம் கிராமத்தை கடற்றொழில் அமைச்சர் பல தடவைகள் கொச்சைப்படுத்தியுள்ளார் என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் வருகைக்கு எதிர்ப்பு வெளியிட்டு, வடமராட்சி சுப்பர்மடம் பகுதி மீனவர்கள், நியாயமான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு சென்ற கடற்றொழில்துறை அமைச்சருக்கும், மீனவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் நிலவியது. இதையடுத்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடைநடுவில் வெளியேறினார்.

இதனையடுத்து அமைச்சர், தான் செல்லுகின்ற கூட்டங்களில், தம்மைக் கொச்சைப்படுத்தி வருகின்றார் என்று அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (ம-4-125)

# சிவராத்திரியை முன்னிட்டு சிவ வாரமும், யாத்திரையும்


யாழ்ப்பாணம், பெப். 22

மகா சிவராத்திரியை முன்னிட்டு, இன்றிலிருந்து எதிர்வரும் முதலாம் திகதிவரை, சிவ வாரமும், சைவத்தமிழ் எழுச்சி யாத்திரையும் முன்னெடுக்கப்படவுள்ளன.

அறநெறிப் பாடசாலைகளை வலுவூட்டுதல், குருதித்தானம் மற்றும் சிரமதானங்களை மேற்கொள்ளல், ஆலயங்கள் தோறும் மனிதநேய உதவிகளை ஊக்கப்படுத்தல், நந்திக் கொடிகளைக் காட்சிப்படுத்தல், சிவ தீட்சை வழங்கல், உருத்திராக்கம் அணிவித்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

இறுதியாக மகா சிவராத்திரி அன்று சிவ தொண்டர்கள் சிவபூமியின் அனைத்து சிவ பிராந்தியங்களில் இருந்தும், மன்னார் திருக்கேதீச்சரத்துக்கு, மோட்டார் சைக்கிள்களில் நந்திக் கொடிகளுடன் யாத்திரை செல்லத் திட்டமிட்டுள்ளனர். (ம-4,7)

# அலையும் கால்நடைகளால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு



கிளிநொச்சி, பெப். 22

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகள் இரவு வேளைகளில், பிரதான வீதிகளில் அலைந்து திரிவதால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

குறிப்பாக ஏ-35 பரந்தன் முல்லைத்தீவு வீதியில், வாகனச் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் தினமும் வீதி விபத்துக்களைச் சந்திக்கின்றனர். கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மட்டும் கடந்த மூன்று நாள்களில் 6 கால்நடைகள் வீதி விபத்துக்களால் இறந்துள்ளன.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து வீதி விபத்துக்களைத் தவிர்க்க வழி ஏற்படுத்த வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ம-4-113)




வடமராட்சியில மைத்திரியின்ர கூட்டத்துக்கு சனம் அள்ளுப்பட்டுக் கொண்டு வந்தது எண்டமாதிரி படங்களை பேஸ்புக்கில பார்த்திருப்பியள். அதைப் பார்த்துட்டு அரைகுறை அறிவுக்கொழுந்துகள், இனி இப்பிடித்தான், தமிழ்த் தேசியம் பேசி சனத்தைப் பேய்க்காட்டேலாது. சனத்துக்கு அபிவிருத்திதான் தேவை எண்டதை இந்தப் படங்கள் சொல்லுது எண்டு வாய்க்கு வந்ததை அடிச்சு விட்டினம்.

ஆனால், "கண்ணால காணுறதும் பொய், காதால கேக்கிறதும் பொய், தீர விசாரிச்சு அறியிறதே மெய் 'எண்டு அவைக்கு விளங்கேலை. இப்பிடி சனம் திரளுற அளவுக்கு மைத்திரி எங்கட சனத்துக்கு ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடேலை. இதே வடமராட்சியில அவரின்ர பதவி போகப்போறதுக்கு கொஞ்சநாளைக்கு முதல், பிரமாண்ட குடிநீர்த் தேக்கத்துக்கு ஒரு அடிக்கல் மட்டும் நட்டதுதான் அவர் செய்த அபிவிருத்தி. அந்த அடிக்கல் நட்டதோட திட்டமும் கிடப்பில போடுப்பட்டுப் போச்சு. அதைப் பற்றி ஒரு பேச்சு மூச்சுக்கூட இல்லை. அதோட கடைசிக்காலத்தில ஒரு ஒக்ரோபர் இரவொண்டில கனவு கண்டிட்டு, ரணிலின்ர அரசைக் கலைச்சு மஹிந்த கொம்பனியை அரசாங்கமா அறிவிச்சு நாட்டின்ர இப்பத்தைக் குழப்பத்துக்கெல்லாம் பிள்ளையார் சுழி போட்ட கோமாளியைக் காண கூட்டமாப் போறளவுக்கு எங்கட சனம் இளிச்சவாயள் இல்லை.

சரி அப்ப கனவு பாழான எம்.பிக்காக போயிருப்பினமோ? எண்டு கேப்பியள். அவரும் என்ன வெட்டிக் கிழிச்சிச்சிட்டார். தன்ர குடும்பக்காரருக்கு மாலை, மரியாதை குடுக்கச் சொல்லி சனத்தையும், அதிகாரியளையும் ஆய்க்கினை செய்யிறதைத் தவிர வேற என்ன செய்திட்டார்? சனத்துக்கு வாற திட்டங்கள் எல்லாத்துக்கையும் மூக்கை நுழைச்சு அந்தத் திட்டங்கள் உரிய ஆக்களுக்கு போக விடாமல் செய்யிறவருக்கு பின்னால சனம் போகாது.

அப்ப எப்பிடி இப்பிடிச் சனம்?

அங்கதான் விசயம் இருக்கு. வீட்டுத்திட்டம் தரப்போறம், சமுர்த்தி நிவாரணம் தர பதியப்போறம், வேலைவாய்ப்புக்கு பதியவேணும் எண்டு ஒவ்வொரு ஏரியாவிலையும் ஒவ்வொரு மாதிரி சனத்துக்கு சொல்லி, பஸ்ஸில வரவைச்சுத்தான் இப்பிடி ஒரு சீனை கனவுக்கார கொம்பனி போட்டிருக்கு. அங்க வந்த பிறகுதான் சனத்துக்கு தங்களை ஏமாத்தி, மைத்திரியின்ர கூட்டத்துக்கு கொண்டந்திட்டினம் எண்டு தெரிஞ்சது. கொஞ்ச நேரத்திலேயே புறுபுறுத்துக்கொண்டு சனங்கள் வெளிக்கிடத் தொடங்கிட்டுதுகள். மைத்திரி மேடையில பேசேக்கை , இருநூறு பேர் தான் நிண்டவையாம்.

அதைவிட இன்னொரு பகிடியும் நடந்தது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கச் சொல்லி நடக்கிற கையெழுத்து வேட்டையை நக்கலடிக்கிறன் பேர்வழி எண்டிட்டு . 'பாதுகாப்புச் சட்டத்தை இல்லாமலாக்கப் போகினமாம், உதை அவை நல்லாட்சிக் காலத்தில ஏன் செய்யேலை?' எண்டு கேட்டார் எங்கட கனவுக்கார எம்.பி. இப்பிடி அவர் பயங்கரவாதத் தடைச்சட்டம் எண்டு சொல்லத் தெரியாமல் நாலைஞ்சுதரம் 'பாதுகாப்புச் சட்டம்' எண்டு நாட்டில இல்லாத ஒரு புதுச்சட்டம் பற்றி பேசினார். அதோட நல்லாட்சியில ஏன் உதுக்காக போராடேலை எண்டு அவர் கேக்கிறது மல்லாக்கப் படுத்திருந்து எச்சில் துப்பிற மாதிரி. ஏனெண்டால் நல்லாட்சி அரசில அவர் நேற்றுக் கூட்டிக் கொண்டு வந்த மைத்திரி தான் ஜனாதிபதி, இதே கனவுக்கார எம்.பி தான் பிரதி அமைச்சர். இதுகூட பாழாப்போன கனவுக்காரருக்கு மறந்து போச்செண்டால் பாருங்கோவன்.




- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓமிக்ரோன் தொற்றாளருக்கு மருத்துவக் கவனிப்பு அவசியம்

*மல்காந்தி கல்ஹேண எச்சரிக்கை*




**கொழும்பு, பெப். 22**

**நோயாளர்களுக்கு ஓமிக்ரோன் வைரஸ் தொற்று ஏற்பட்டால், அவர்களை உடனடியாக மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லவேண்டும். அவ்வாறு செய்யாவிடில் உயிராபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.**

இவ்வாறு விசேட மருத்துவ நிபுணர் மல்காந்தி கல்ஹேண எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது;

ஓமிக்ரோன் வைரஸ் நாட்டில் வேகமாகப் பரவிவரும் அதேவேளை, இந்த வைரஸ் தொற்றுக்குள்ளாகும் பல்வேறு நோய்களைக் கொண்டவர்களுக்கு, தொற்றுக்கான அறிகுறிகள் கடுமையாகக் காணப்படுகிறது. இந்த வைரஸ் திரிபால் ஏற்படும் பாதிப்புக்கள் குறைவு என்பதால், வைரஸ் தொற்று ஏற்படும்போதுகூட அவர்களை மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வதில்லை. தொற்றாளர்களை வீட்டிலேயே தொடர்ந்து வைத்திருக்கிறார்கள். இது தொடர்பில் பல்வேறு தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இது உண்மையில் பாரதூரமான விடயம். பல்வேறு நோய்களைக் கொண்டவர்களுக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டு குறைந்தளவிலான நோய் அறிகுறிகள் தென்பட்டாலும் அவர்களை வீடுகளில் வைத்திருப்பது ஆபத்தானது. இதனால் உயிராபத்துகள் கூட ஏற்படலாம் -என்றார். (எ-இ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், பெப். 22

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கரவெட்டி- துன்னாலை -குடவத்தை பெரியதம்பிரான் சிவன் ஆலயத்தின் பிரதம குருக்கள் கலாநிதி சிவஸ்ரீ நா.கலாதரக்குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. (ம-ரி)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 22

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் சொற்பொழிவில், பரிபாலன சபைத்தலைவர் த.சோதிலிங்கத்தின் தலைமையுரையைத் தொடர்ந்து, 'முருகப்பெருமானும் அருணகிரிநாதரும்' என்ற விடயப்பொருளில் சைவப்புலவர் பொன் சந்திரவேல் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (ம-ரி)

* * *

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் இடம்பெற்று வரும் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' என்ற தொடரின் 8 ஆவது சொற்பொழிவு எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவை இந்து பொதுச்சேவை கழக அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், 'நாவலர் காட்டிய சமயப் பாரம்பரியம்' எனும் தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் நித்தியபாபுதரன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு, மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ம-ரி)

## நான்காம் தடுப்பூசி பற்றி இதுவரை தகவல் இல்லை

கொழும்பு, பெப். 22

நான்காம் கட்டத் தடுப்பூசியைச் செலுத்துவது தொடர்பான எந்தவொரு சுற்றறிக்கையோ, அறிவுறுத்தல்களோ இதுவரை வெளியிடப்படவில்லை என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு மாதத்துக்குள்ளான காலப்பகுதியில் ஏற்கனவே தொற்று உறுதியான நபருக்கு மீண்டும் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் சுகாதார வழிகாட்டுதல்களை உரிய வகையில் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். இதுவரை தடுப்பூசி பெறாதோர் உடனடியாக அதைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் -என்றார். (வ-இ)

## கொரோனாவால் முதியவர் சாவு!

சாவகச்சேரி, பெப். 22

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

மட்டுவிலைச் சேர்ந்த 66 வயதுடைய முதியவர் உயிரிழந்த நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-4-9)

## கொரோனாத் தொற்றாளர் மருத்துவமனையில் மாயம்

கொடிகாமம், பெப். 22

யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர் ஒருவர் காணாமற் போயுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

வடக்கு மீசாலையைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

காய்ச்சல் காரணமாக கடந்த 16ஆம் திகதி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இவர் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதியானது.

நோய் தீவிரமடைந்ததால் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மறுநாள் 17ஆம் திகதி அவரது மனைவி யாழ் போதனா மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது கணவரை அங்கு காணவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (வ-159)

## வீட்டுப் பயனாளிகளுக்கு தலா 20 பைக்கற் சிமெந்து




சாவகச்சேரி, பெப். 22

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத்திட்டம் கிடைத்த மேலும் ஒரு தொகுதியினருக்கு நேற்று தலா 20 பைக்கற் சிமெந்து வழங்கப்பட்டது.

சிமெந்து இறக்குமதி செய்யும் தனியார் வர்த்தகர்களின் பங்களிப்புடன், பயனாளிகளுக்கு சிமெந்து வழங்கப்பட்டது. கடந்த வாரமும் 60 பயனாளிகளுக்கு மாவட்டச் செயலகம் மற்றும் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பங்களிப்புடன் சிமெந்து வழங்கப்பட்டது. (ம-4-9)

## கலைஞர்களின் விவரம் கோரல்

வடக்கு மாகாணத்தில் பொருண்மியம் நலிவடைந்த, கலைஞர்களுக்கு உதவும் நோக்கில், அவர்களது விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

மாகாண பிரதம செயலாளர் பணியகம், அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் இதனை அறிவித்துள்ளது. கலைஞர்கள் தமது பிரதேச கலாசாரப் பரிவினருடன் தொடர்புகொண்டு உரிய படிவத்தைப் பூர்த்தி செய்து விவரங்களைச் சமர்ப்பிக்கலாம். (ம-4-9)

## சிவராத்திரிக்கு முன்னாயத்தம்



கிளிநொச்சி, பெப்.22

கிளிநொச்சி- உருத்திரேஸ்வர ஆலயத்தில் இடம்பெறவுள்ள சிவராத்திரியை முன்னிட்டு, முன்னாயத்தக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

கூட்டத்தில் சுகாதாரம், குடிதண்ணீர், இடவசதிகள் போன்றவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

ஆலயத்தின் தலைவர் பசுபதிபிள்ளை தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், கரைச்சி பிரதேசசபையின் உறுப்பினர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மற்றும் ஆலய பரிபாலன சபையினர் கலந்துகொண்டனர். (ம-4-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகப் பெண்களின் வாழ்வியல் மோசம்!

## ஆளுநர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், பெப். 22**

**யாழ். தீவகப் பகுதிகளில் சில இடங்களில் பெண்கள் சமூகத்துக்கு விரோதமான நடத்தைகளுக்குத் தள்ளப்படுகின்றனர். இது வருத்தமளிக்கும் செயற்பாடு என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

யாழ். மாவட்டச் செயலகம் ஊடாக தீவகப் பகுதிகள் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்தமை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; தீவகப் பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை, சாதாரணப் பகுதிகளோடு ஒப்பிடுகையில் கஷ்டமானது. இருந்தாலும் தீவகப் பகுதிகளில் வாழும் சில பெண்கள் சமூகத்துக்கு ஒவ்வாத விடயங்களில் ஈடுபடுவது, எமது சமூகத்துக்கே அவமானமானது.

சமூகத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபடும் அத்தனை பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, ஏற்ற தொழிற்றுறையை ஏற்படுத்துவதற்கு, வடக்கு மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் எனது பொறுப்பை நிறைவேற்றத் தயாராக இருக்கின்றேன் - என்றார். (ம-4-20,27)



## மோ.சைக்கிள் - ஓட்டோ விபத்தில் இருவர் காயம்

கிளிநொச்சி, பெப். 22

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் மத்திய கல்லூரி முன்பாக நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளும் முச்சக்கரவண்டியும் மோதி இருவர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியும் அதே பகுதியில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிளும் ஒன்றையொன்று முந்திச்செல்ல முற்பட்ட வேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-ரி1-113)

## மரத்துடன் மோதி கார் விபத்து

யாழ்ப்பாணம், பெப். 22

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தன் கேணிப் பகுதியில் வீதியின் குறுக்கே நாய் சென்றதால் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியை விட்டுவிலகி அருகே இருந்த மரத்தின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அராலி - தெல்லிப்பழை பிரதான வீதியின் சித்தன்கேணிப் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது காரின் முன்பக்கம் பலத்த சேதத்துக்கு உள்ளானது. காரில் பயணித்தவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-125)





## செவிப்புலன் அற்றவர்களுக்கு முல்லைத்தீவில் சங்கம் திறப்பு

முல்லைத்தீவு, பெப். 22

முல்லைத்தீவு மாவட்ட செவிப்புலனற்றோர் சங்க அலுவலகம் செல்வபுரத்தில் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

அலுவலகத்தின் பெயர்ப்பலகையை வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் திரை நீக்கம் செய்தார். நிகழ்வில் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபையின் உபதவிசாளர் தெம்பைப்பிள்ளை, சமுர்த்தி உத்தியோகத்தர் வே.சந்திரகாந்தன் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சங்கத்தில் தற்போது 33 செவிப்புலன் அற்றவர்கள் அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர். (ம-4-19)

## தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கட்டப்பிராய் மூன்றாம் கட்டைப் பகுதியில் தவறான முடிவெடுத்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. ஜே.ரசிவரன் (வயது - 28) என்பவரே உயிரிழந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞர் தனது காதலியுடன் ஒன்றாக வசித்து வந்துள்ளார். பதிவுத் திருமணம் செய்யாத நிலையில் இவர்கள் ஒன்றாக வாழ்ந்து வந்துள்ளனர். இந்த நிலையில் காதலி தகராறு காரணமாக வீட்டை விட்டுச் சென்றுள்ளார். இதையடுத்தே இளைஞர் தவறான முடிவெடுத்துள்ளார் என்று பொலிஸார் ஆரம்பக் கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். (ம-


## யாழ்.-மானிப்பாய் வீதியின் மதகுகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணம் காரைநகர் வீதியிலுள்ள மதகுகள் சீரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம்- காரைநகர் மானிப்பாய்வீதி அண்மையில் சீரமைப்புச் செய்யப்பட்ட நிலையில் குறித்த வீதியிலுள்ள மதகுகள் எவையும் சீரமைக்கப்படவில்லை. இந்த நிலையில் குறித்த வீதியிலுள்ள மதகுகள் சீரமைப்புச் செய்யப்பட வேண்டுமென வலி. மேற்கு, வலி.தென்மேற்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வலியுறுத்தினர்.

இந்த நிலையில் யாழ்.- மானிப்பாய் - காரைநகர் வீதியிலுள்ள மதகுகள் தற்போது சீரமைப்புச் செய்யப்படுகின்றன. (ச-125)



*மூளாய் பகுதியில்*

## கஞ்சாவுடன் 4பேர் கைது

யாழ்ப்பாணம், பெப். 22

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் - வேரம் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நால்வரை வட்டுக்கோட்டை பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் 33 கிராம் கஞ்சாவுடன் நான்கு சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் நால்வரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (ச-27)

## மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட 6 வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல்

### சாரதிகளும் கைது



முல்லைத்தீவு, பெப். 22

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட 6 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. 4 டிப்பர்களும், 2 உழவு இயந்திரங்களுமே அவ்வாறு கைப்பற்றப்பட்டன.

வாகனங்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டு, பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-4-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணியில் சாரணியத்தை பரப்பியவர் தந்தை பேடன் பவல்

இ.தில்லைவாசன்,
ஜனாதிபதி சாரணன்- 1980
உதவி மாவட்ட ஆணையாளர்
யாழ்ப்பாணம்

இந்த உலகுக்கு சாரணியம் என்ற ஒப்பற்ற கொடையை உவந்தளித்த தந்தை பேடன் பவலின் 165ஆவது பிறந்த தினமான இன்று அவரின் வாழ்வையும் பணிகளையும்பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

பேடன் பவல் 1857ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி இங்கிலாந்தில் லண்டன் மாநகரில் பிறந்தார். தாய், தந்தையர் சூட்டிய நாமம் றொபேட் ஸ்டீவன்சன் சிமித் பேடன் பவல். பத்தொன்பதாவது வயதில் கல்லூரியில் பட்டம் பெற்று இராணுவத்தில் இணைந்தார். இந்தியாவுக்கு குதிரைப்படை உபதளபதியாகச் சென்றார். 'கிரிமின் போரில்' பெரும் புகழ்பெற்று இருபத்தாறு வயதில் தளபதியானார். ஆபிரிக்காவிலே முப்பது வயதில் கொடி அஸாந்தியருக்கு எதிராகவும் ஸீலு சாதியினருக்கும் எதிராகவும் மிலேச்ச மடோபினியினருக்கு எதிராகவும் பெரும் போர்களை நடத்தினார். வெற்றியும் கண்டார். அதன் பின்னர் தன் கவனத்தை சாரணியத்துவம் மீது திருப்பினார். பிரபு எழுதிய "சாரணியத்துக்காய துணை' என்னும் நூல் சிறுவர் பாடசாலைகளில் பாடப்புத்தகமாக பேணப்பட்டது. சாரணிய சிறார்களுக்கான பிரமாணத்தையும் 10 விதிகளையும் உருவாக்கினார்.

1908இல் இரு வாரங்களுக்கு ஒரு பிரசுரமாக ஆறு பிரசுரங்களாக இளைஞர் சாரணியம் என்னும் நூலை வெளியிட்டார். சித்திரங்களையும் தானே தீட்டினார்.

1910ஆம் ஆண்டு 53 வயதில் சாரணிய வளர்ச்சியின் பெருக்கைக் கண்டு பேடன் பவல் இராணுவத்தில் வகித்த பெரும் பதவியை விட்டு விலகினார். வருங்கால போர்களுக்கு சிலரைப் பழக்குவதிலும் பார்க்க வருங்கால சந்ததியினரை உத்தமர்களாக்குவதற்கு சாரணிய பயிற்சியே சிறந்தது என உணர்ந்தார். உலகம் முழுவதும் தொண்டுபுரிய முன்வந்தார். 55 வயதில் உலக சகோதரத்துவ சாரணிய இயக்கமாக்குவதற்காக உலக நாடுகளுக்கு பயணங்களை மேற்கொண்டார். தனது 59ஆவது வயதில் யாழ்ப்பாணத்தில் 5 பாடசாலைகளில் குருளைச் சாரணர் அமைப்புக்களை உருவாக்கினார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, புனித பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, புனித சம்பத்தரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியன அவை.



தனது 61 வயதில் 'திரிசாரணர்' 18 வயது தொடக்கம் 24 வயதினருக்கான பிரிவை ஆரம்பித்தார். இவ்வாண்டில் இலங்கையில் கடற்சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. 62 வயதில் 'ஹில் வெல் பாக் சாரணியத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. 21ஆவது ஆண்டில் உலகின் பல தேசங்களில் 20 லட்சம் சாரணர்கள் இருந்தமை கண்டு ஐந்தாம் ஜோர்ச் மன்னன் 'சாரணத் தந்தை கில்வெல் பேடன் பவல் பிரபு' என நாமம் சூட்டிக் கௌரவித்தார்.

சாரணத் தந்தை 64 வயதிலும் 77 வயதிலும் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டார். அந்தவேளைகளில் யாழ்ப்பாணத்தில் சாரணியம் அதி உன்னத வளர்ச்சியடைந்துள்ளமையை கேள்வியுற்று சாரணத் தந்தை யாழ். மண்ணில் காலடி பதித்தார்.

சாரணர்களையும்- அதிபர்களையும்- ஆசிரியர்களையும்- மக்களையும் சந்தித்து சாரணியம் மேன்மேலும் உன்னதமாக வளர்ச்சியுற வேண்டிய வருங்கால திட்டங்களையும் ஆலோசனைகளையும் அளித்தமை தரணி போற்றும் சாரணர் வரலாற்றுப் பதிவாகும்.



## யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தக் கோரிக்கை!

கிளிநொச்சி, பெப்.22

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் - நெத்தலி ஆற்றுப்பகுதியில், யானைகள் மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்து பயன்தரு மரங்களை அழிக்கின்றன என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு ஒரு மணியளவில் மக்கள் குடியிருப்புக்குள் நுழைந்த யானைகள் பயன்தரு மரங்களை அழித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அறுவடை முடியும் நிலைமையில், கல்மடுக்குளம் பகுதியில் தினமும் காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகளுக்குள் நுழைகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், மின்சார வேலி அமைக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

# அமைச்சர்களுக்குள் முரண்பாடு உச்சம்!

## கோத்தாபயவிடம் முறைப்பாடு

கொழும்பு, பெப். 22

**சில அமைச்சுக்களின் விவகாரங்கள் தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

அமைச்சர்களுக்கு இடையே மட்டுமன்றி அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இடையேயும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இதுதொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் பலர் முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

இராஜாங்க அமைச்சின் செயலரை கூட தமது அதிகாரிகளால் சந்திக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்று வனஜீவராசிகள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளார்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அமைச்சுக்களின் பணியை இலகுபடுத்தும் வகையில் இராஜாங்க அமைச்சுக்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள போதிலும், அமைச்சுக்களின் பொறுப்பு அரசியலமைப்பு ரீதியாக அமைச்சரவை அமைச்சர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர்களின் அமைச்சுக்கள் விடயங்களை இலகுபடுத்துவதற்காகவே வர்த்தமானி மூலம் ஒதுக்கப்பட்டது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் இராஜாங்க அமைச்சர்களின் செயலாளர்களை அழைத்து, விரைவில் அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)



## பற்றிக் உற்பத்தி நிலையம் யாழ்ப்பாணத்தில் திறப்பு

'சௌபாக்கியா பற்றிக்' உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவால் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விற்பனை நிலையத்தைத் திறந்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுகர்சன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அறிக்கைகள் நமக்குத் தேவையில்லை...!

மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆணையாளரின் 17 பக்க அறிக்கையில் இலங்கைமீது கடும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது. கடந்த காலங்களைவிடவும் இலங்கை தொடர்பான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் தெரிகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டம், நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான உரிய திட்டங்கள் இன்மை என்பன தொடர்பாக ஐ.நா. ஆணையாளர் சிறப்புக் கவனம் எடுத்திருக்கின்றார் என்று ஆணையாளர் அலுவலகத் தகவல்கள் கூறுகின்றன. இலங்கையில் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழர்கள் தங்களுக்கான நீதியை எதிர்பார்த்திருக்கும் நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கையைப் பொறுப்புக்கூறல் தொடர்பாக உந்தித் தள்ளுமானால் அது மகிழ்ச்சியே.

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்னரும் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. அந்தத் தீர்மானங்களில் பல விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன. அவற்றை நடைமுறைப்படுத்துவோம் என்று சில சந்தர்ப்பங்களில் இலங்கை, சர்வதேசத்துக்கு வாக்குறுதியும் வழங்கியிருந்தது. அதைவிட ஐ.நா. நிபுணர்கள், அறிக்கையாளர்கள் இலங்கைக்கு வரும்போதும், இராஜதந்திரிகள் வரும்போதும் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் தொடர்பான வாக்குறுதிகளை வழங்குவதையும் இலங்கை வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றது.


இவ்வாறு வாக்குறுதிகளை அள்ளிவீசும் இலங்கை, அவற்றை நிறைவேற்றுவதில் எந்தவித ஆர்வத்தையும் காட்டுவதில்லை. கண்துடைப்புக்காகச் சில காரியங்களைச் செய்துவிட்டு சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே முயற்சித்தது - முயற்சிக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும்சரி, சர்வதேச நாடுகளும்சரி தீர்மானங்களில் குறிப்பிட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தும் அல்லது நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுகின்றனவா என்றால், இல்லை என்றே கூறவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, காணி விடுவிப்பு, அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள், பௌத்தமயமாக்கல் என தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இத்தனை காலமாக எந்தத் தீர்வும் கிட்டவில்லை. தேசிய பிரச்சினையான இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஓர் அடியேனும் இலங்கை முன்னகரவில்லை. கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டிருக்கும் நிலையில் இப்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் இலங்கைமீது கடும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

அறிக்கைகள்மீதும், தீர்மானங்கள்மீதும் தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை நலிந்துவிட்டது. தமிழ்மக்கள் எதிர்பார்ப்பது செயல்வடிவத்தையே. ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச நாடுகளும் இலங்கையைக் கைக்குள் வைத்திருக்க தமிழர் பிரச்சினையைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தாது, பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதியைப் பெற்றுத்தர முயலவேண்டும் என்பதே தமிழ் மக்களின் அவா! இலங்கையை பொறுப்புக்கூறல் நோக்கி நகர்த்துவதற்குத் தேவையான பொறிமுறையை ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவை உருவாக்க வேண்டும். தீர்மானங்களும், அறிக்கைகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காது என்பதே உண்மை...!

நாளொரு நல்வார்த்தை

"எதையாவது எளிமையாக மாற்றியமைப்பதற்கு, ஏராளமான கடின உழைப்புத் தேவைப்படுகிறது"
- ஸ்டீவ் ஜாப்ஸ்




# எரிபொருளின்றி செயலிழந்த மின் உற்பத்தி நிலையங்கள்

கொழும்பு, பெப். 22

**எரிபொருள் பற்றாக்குறை காரணமாக சபுகஸ்கந்த மற்றும் யுகதனவி மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் நேற்றுமுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் தேசிய மின்கட்டமைப்புக்கு 370 மெகாவாட்ஸ் மின்சார இழப்பு ஏற்பட்டுள்ளது.**

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையம், உலை எண்ணெய் மற்றும் டீசலைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையில் எரிபொருள் இன்மையால் அதன் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன. அதையடுத்து தேசிய மின் கட்டமைப்பு, 270 மெகாவாட்ஸ் மின்சாரம் இழக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, காலை சபுகஸ்கந்த 'ஏ' மற்றும் பி மின் நிலையங்கள் எரிபொருள் கையிருப்பு முடிவடைந்ததன் காரணமாக மீண்டும் மூடப்பட்டுள்ளன. இதனால் தேசிய மின்கட்டமைப்புக்கு 100 மெகாவாட்ஸ் இழப்பு ஏற்பட்டுள்ளது.

நீர்மின் உற்பத்தியின் மூலம் பகல் வேளையில் இந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்ய முடியும் என்றாலும், இரவு வேளையில் மின்சார விநியோகத்தில் இடையூறு ஏற்படக்கூடும் என்று கூறப்படுகின்றது.

(எ-இ)

# வீதி அபிவிருத்தியில் பெரும் நிதி மோசடி!

## 'ஊழல் எதிர்ப்பு குரல்' அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 22

அதிவேக நெடுஞ்சாலை வீதி அபிவிருத்தியூடாக பெரும் நிதி மோசடி ஒன்று இடம் பெறவுள்ளது என 'ஊழல் எதிர்ப்பு குரல்' அமைப்பின் அமைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கலகெதர முதல் ரம்புக்கனை வரையிலான இருபது கிலோ மீற்றர் வீதி நிர்மாணிக்கப்பட்டால் அதன் ஊடாக 16 ஆயிரத்து 440 கோடி ரூபா பண மோசடி இடம்பெறும். இந்த வீதியை நிர்மாணிப்பதற்கு சீன நிறுவனமொன்று ஆயிரத்து 50 மில்லியன் டொலர் தேவை எனக் கோரியிருந்தது. ஆனால் உள்நாட்டு நிறுவனமொன்று அதற்கு ஆயிரத்து 872 மில்லியன் டொலர் தேவைப்படும் எனக் குறிப்பிட்டது. எனினும் உள்நாட்டு நிறுவனத்துக்கு இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால்




சுமார் 16 ஆயிரத்து 440 கோடி ரூபா நஷ்டம் ஏற்படும். இந்த விடயத்தில் பெருந்தெருக்கள் அமைச்சு, அமைச்சரவையை பிழையாக வழிநடத்தியுள்ளது - என்றார். (வ-இ)

நாள்வள 23.02.2022 புதன்கிழமை மாசி 11
சுபநேரம் : 05.00 - 06.30
ராகுகாலம்: 12.30 - 02.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 - 10 - 1956



இறப்பு 22 - 02 - 2020

### சின்னத்தம்பி சிவகுமார்

**(கற்பக சிவசோதிமில் உரிமையாளர்)**

நினைவினில் மாமா நிலையா யிருக்க
மனைகளும் ஏங்க மகராசன் உன்றன்
வினைமுடிந்த தென்று விரைவில் இறைமை
உனைக்கொண்டு போனானுயிர்.

நினைவுகளுடன்
மருமகள்
சிவாஜினி சரவணன்
லண்டன்

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 11 . 1940



மறைவு 20 . 02 . 2022

### திருமதி இராசையா சிதம்பரம்

**(மணியக்கா)**

பூநகரி மறவகுறிச்சியை பிறப்பிடமாகவும் இராணி வீதியை வசிப்பிடமாகவும் 958 பருத்தித்துறை வீதியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட மணியக்கா என செல்லமாக அழைக்கப்படும் திருமதி இராசையா சிதம்பரம் அவர்கள் நேற்று முன்தினம் (20.02.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு செல்லமுத்துவின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரையப்பா சின்னத்தங்கத்தின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் தில்லைநாயகி கணபதிப்பிள்ளை (பொன்னுத்துரை), காலஞ்சென்ற கந்தையா(சின்னத்துரை), திசநாதன்(குஞ்சையா) மற்றும் இரத்தினசிங்கம், வேலாயுதப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் இராசமணி சிவபாக்கியம் தங்கம்மா(கமலம்) குலதேவி சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் இரவீந்திரன்(வவுனியா) மகேஸ்வரன் (ஜேர்மனி) நகுலேந்திரன்(பத்திரிகை முகவர் கல்வியங்காடு) விஜயகௌரி(நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும் வசந்தா(வவுனியா) மீனாம்பாள்(ஜேர்மனி) வித்தியா (யா/திருநெல்வேலி றோ.க பாடசாலை) நிர்மலானந்தன்(ரூபன் நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பாலசிங்கம் மகேஸ்வரி வடிவேல் ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற இரவிச்சந்திரன் மற்றும் ஜெயசந்திரன் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் வசந்தா சிறிதரன் சிறிகாந்தன் வளர்மதி சிறிறஞ்சன் ஜெயவதனி ஜெயமாலினி ஜெயந்தினி கார்த்திகா ராதிகா றஜிதா சியாமளா சசிகுமார் சசிகலா பிரதீபன் ஆகியோரின் பாசமிகு மாமியும் அபிநயன்(வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்) சகானா(ஜேர்மனி) டர்சிகா(யா/இந்து மகளிர் கல்லூரி) டினேஸ்காந்(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) டிலக்ஷிகன்(நோர்வே) ரதீபன்(நோர்வே) நிதுஷன்(நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 958 பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைவெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (22.02.2022) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 617 2560

தகவல் :
குடும்பத்தினர்

# உக்ரைனில் போர் பதற்றம்: இந்தியர்கள் வெளியேறுக

## இந்தியத் தூதரகம் அறிவிப்பு

புதுடில்லி, பெப.22

உக்ரைனில் பதற்றமான சூழல் தொடர்ந்து நிலவி வருகின்ற நிலையில் அங்குள்ள இந்தியர்கள் அனைவரையும் வெளியேறுமாறு இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. கிடைக்கும் விமானங்கள் மற்றும் தனி விமானங்கள் மூலம் உக்ரைனிலிருந்து வெளியேறுமாறும், இந்திய மாணவர்கள் அனைவரும் தனி விமானம் குறித்த தகவல்களுக்கு சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரருடன் தொடர்பில் இருக்குமாறும் மேலும் தெரிவித்துள்ளது.

(ச-இ)

# ராணி நலம்பெற மோடி பிரார்த்தனை

கொரோனாத் தொற்றுக்குள்ளான இங்கிலாந்து ராணி 2ஆம் எலிசபெத் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

(ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய வீடு, மனை வாங்கும் திட்டம் இன்று இனிதே நிறைவேறும். குடும்பத்தில் சுபவிஷயங்களை தீர்மானிக்கும் பேச்சு நிலவும். குடும்பத்தினர் இடையே நெருக்கம் உண்டாகும். மகிழ்ச்சி கூடும்.

**இடபம்:** வாகனத்தில் புதிய மாற்றம் செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். உடல் நலனில் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. வாகனப் பயணத்தின்போது மிதவேகத்தை பின்பற்றவும்.

**மிதுனம்:** பணியிடத்தில் உங்களுக்கு ஆதரவு அதிகரிக்கும். தொழில், வியாபாரம் நன்கு வளர்ச்சி பெறும். உங்கள் கை ஓங்கி இருக்க குறுக்கு வழியை நாடாதீர்கள்.

**கடகம்:** நீங்கள் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். எதையும் வேகமாக செய்து முடிக்கும் ஆற்றல் உங்களுக்கு இருக்கும். எதிர்காலத்துக்காகப் பணம் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும்.

**சிம்மம்:** இதுவரை நீங்கள் பட்ட கஷ்டங்கள் எல்லாம் முடிவுக்கு வரும். குடும்ப பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும். நிதி பிரச்சினை இன்று முதல் படிப்படியாக குறைய தொடங்கும்..

**கன்னி:** கடன் வாங்குவதைத் தவிர்க்கப்பாருங்கள். அதுவே நல்லது. உறவினர்களுடன் சுமுகமான சூழல் இருக்கும். குடும்ப வருமானம் சந்தோஷிப்படும்படி இருக்கும். இலாபம் சுமாராகத்தான் இருக்கும்.

**துலாம்:** இன்று ஏற்படும் வீண் செலவுகளை உங்களால் கட்டுப்படுத்த முடியும். தாயின் உடல்நலம் மேம்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணியாளர்கள் சிலருக்கு எதிர்பாராத இடமாற்றம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொழிலில் எதிர்பாராத லாபம் கிடைக்கலாம். மகிழ்ச்சி கூடும். சிலருக்கு வீண் விரயம் ஏற்படலாம். தன்னம்பிக்கை அதிகரிக்கும். அலுவலகத்தில் மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி ஒன்று நடைபெறும்.

**தனுசு:** பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். உங்களது முயற்சி வெற்றி பெறும். புதிய முயற்சி ஒன்றில் சிறிய தடைக்குப் பின் வெற்றி கிடைக்கும். உங்களுக்கு புதிய பொறுப்புக்கிடைக்கலாம். குடும்ப ஒற்றுமை சிறக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட்டு அதில் வெற்றியும் காண்பீர்கள். ஆரோக்கியத் தொல்லைகள் இன்று சற்றே குறையும். பேச்சினால் அலுவலகத்தில் வெற்றி காண்பீர்கள்.

**கும்பம்:** குழந்தைகளின் எதிர்காலம் குறித்த முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உங்களின் சாதனை ஒன்று உங்களுக்கு பெருமை சேர்க்கும். உங்களது திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

**மீனம்:** எதையும் பல முறை யோசித்து விட்டுச் செய்வது நல்லது. எல்லோரையும் அனுசரித்து செல்வது நன்மையைத் தரும். பிறரது குடும்ப முன்னேற்றத்துக்கு ஆலோசனை தருவீர்கள். சிறப்பான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைத் துறை சார் மின்னணு-எந்திரவியல் (Mechatronics)துறையில் அடுத்த தலைமுறைக்கான பயிற்சி




## ஆடைத் துறையில் ஆடைத் துறை சார் மின்னணு-எந்திரவியல் பொறியாளராக (Technician) இணைந்து, தொழில்துறையின் சிறந்தவர்களிடமிருந்து பயிற்சியைப் பெறுங்கள்!

Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH - MAS Holdings (Pvt) Ltd உடன் இணைந்து இலங்கையில் தொழிற்பயிற்சி திட்டமானது, இலங்கையில் உள்ள இளைஞர்களுக்கு தேவையான திறன்களை வலுவூட்டும் வகையில் கூட்டுறவு தொழிற்பயிற்சி மாதிரியின் கீழ் மேம்பட்ட தன்னியக்க (Automation) தொழில்நுட்ப பாடத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது. ஆடைத் துறையில் புரட்சியை ஏற்படுத்தக்கூடிய இயந்திரங்களை இயக்கவும் பயிற்சிகள் வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்கு ஜேர்மன் மத்திய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைச்சகம் (BMZ) நிதியளிக்கிறது.

- இலங்கை-ஜெர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (SLGTI) மற்றும் (MAS) வழங்கும NVQ நிலை 5 பாடநெறி
- கிளிநொச்சியில் உள்ள SLGTI இல் 10 மாத கோட்பாட்டுப் பயிற்சி மற்றும் இலங்கையில் உள்ள MAS தொழிற்சாலைகளில் 12 மாத உள்ளகப்பயிற்சி மற்றும்
- உணரிகள் (Sensors) அடிப்படையிலான உபகரணங்கள்/ இயந்திரங்களை இயக்க கற்றுக்கொள்ளும் வாய்ப்பு.
- MAS இல் நடைமுறைப் பயிற்சியின் போது பொதுவான செலவுகளை ஈடுகட்ட கவர்ச்சிகரமான கொடுப்பனவு
- வெற்றிகரமான பயிற்சியாளர்களுக்கு உள்நாட்டில்/ சர்வதேச அளவில் MAS இல் வேலை வாய்ப்புகள்

குறைந்த பட்ச கல்வி தகமைகள் - க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் அல்லது பொறியியலில் B தேர்ச்சிகள், மின்னியல், மின்னணு எந்திரவியல் அல்லது வாகன பொறியியல் , தொழிற்சாலை தையல் இயந்திர துறையில் NVQ-4

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

In cooperation with
Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Swiss Confederation
Federal Department of Justice and Police FDJP
State Secretariat for Migration SEM

MAS
CHANGE IS COURAGE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், சிங்கள ஊடகத்துறையினரிடையே புரிதலை ஏற்படுத்த முயன்றவர் லியனாராச்சி

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம்

யாழ்ப்பாணம், பெப். 22

மூத்த ஊடகவியலாளரும் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவருமான கமல் லியனாராச்சியின் திடீர் மறைவு, சிங்கள, தமிழ் ஊடகத்துறைக்குப் பேரிழப்பாகும் என தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பை மையமாகக்கொண்டு செயற்படும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்துடன் நெருங்கிய உறவைப் பேணியவர் என்று கூறப்பட்டுள்ள அந்த அனுதாபச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கமல் லியனராச்சி, லக்பிம என்ற சிங்கள நாளிதழில் மூத்த செய்தியாளராகக் கடமையாற்றியிருந்தார். நீதி என்ற சிங்கள வார இதழ்மூலம் ஊடகத்துறைக்குள் கால்பதித்திருந்தார். சுமார் முப்பது ஆண்டுகால ஊடகத்துறை அனுபவமுடைய இவர், ஆங்கில மொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர்.

ஊடகத்துறையில் பல அனுபவங்களைப் பெற்று, 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சிங்கள மொழிப் பிரிவுப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியிருந்தார்.

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பதவி வகித்து, பின்னர் முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகவும் பதவியுயர்வு பெற்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை உயிரிழக்கும்வரை பணியாற்றியிருந்தார்.

ஊடக வளவாளராகவும் கடமையாற்றிய கமல் லியனாராச்சி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்களை நடத்தியதுடன், அது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களையும் பெற்று ஆவணப்படுத்தியிருந்தார். அவற்றை அரசியல் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ-27)

# அமைச்சுக்களின் செயலாளர்கள் விரைவில் மாற்றம்

கொழும்பு, பெப். 22

அமைச்சுக்கள் பலவற்றின் செயலாளர்கள் அடுத்தவாரம் மாற்றப்படவுள்ளனர் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முக்கியமான அமைச்சுக்கள் ஐந்தின் செயலாளர்கள் இதில் உள்ளடங்குகின்றனர். அமைச்சுக்களை மேலும் வினைத்திறனாக வைத்திருக்கும் வகையில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரியவருகிறது. (வ-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 01 - 1995



மறைவு 21 - 02 - 2022

## ஜெயசுந்தரசேகர் ரிஷிவரன் (வவா)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயசுந்தரசேகர் ரிஷிவரன் நேற்று (21.02.2022) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் இராசையா ஜெயசுந்தரசேகர் (பஞ்சலிங்கம்), மேரிமார்க்கிரேட் மற்றும் மரியராணி தம்பதியரின் அன்பு மகனும், ரிஷிகான், ரினேஷ் (மலேசியா), ரிசாந்தன், ரிசிக்கா(பிரான்ஸ்), ரிசாத், ரிசிராஜ், ரிசீலன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் விஜி, சுயித்தா, திலீபன், யாழினி, கௌதமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திக்ஷன், விகிர்தன், யொரீபன், ஆதீஸ் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (22.02.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3ம் கட்டை,
சிங்கராஜா லேன்,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## அனுஷானந்தவதி வாமதேவன்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அனுஷானந்தவதி வாமதேவன் நேற்று (21.02.2022 ) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலம்சென்ற பதஞ்சலி சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு புதல்வியும், சின்னத்துரை, சரஸ்வதியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்துரை வாமதேவன் (ஓய்வு பெற்ற மக்கள்வங்கி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், துஷானந்தி, ஹதீபன் தனுஷி ஆகியோரின் அன்புத்தாயாரும், பதீதரன், கஜேந்திரக்குமார், ஹேமலதா ஆகியோரின் அன்பு மாமியும், காலம்சென்ற ஆனந்த மகேஸ்வரன் காலம்சென்ற ஆனந்த பாஸ்கரன், ஆனந்த மனோகரன் , ஆனந்த மோகனதாஸ் , ஆனந்தசற்குருநாதன், ஆனந்த சிவதாஸ் , சுவர்ணகலா , நவேந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலம்சென்ற விமலேந்திரன் , சதானந்தன், காலம்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா, விமலாதேவி, ஜெகதீஸ்வரி, தர்மினி ஆகியோரின் அன்பு மச்சாளும், வல்லபை, தமிழ்க்கனி, அறிவழகன், ஆரபி, நிலுக்சன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.02.2022) வியாழக்கிழமை இலக்கம் 30/2 செட்டிவளவு வீதி இணுவில் மேற்கு இணுவில் என்னும் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

077 604 7782

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 04 . 1940



இறப்பு 17 . 02 . 2022

## எட்வேட்ராஜா பிலோமினா

யாழ். வசாவிளானைப் பிறப்பிடமாகவும், இளவாலை பத்தாவத்தை மற்றும் பாண்டியன்தாழ்வு விதான்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட்ராஜா பிலோமினா அவர்கள் 17.02.2022 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை மரிய ஞானரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிலிப்புப்பிள்ளை எட்வேட்ராஜா அவர்களின் ஆருயிர் மனைவியும், எட்வினா(கனடா), ராஜினா (ஜேர்மனி), அருட்சகோதரி வேஜி (திருச்சிலுவை கன்னியர்), ராஜநாதன் (கனடா), அருட்தந்தை எட்வினாதன் (நிதியாளர், ஆசிரியர் - புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றெஜினா (இத்தாலி), திரேசம்மா (கனடா), இம்மானுவேல், காலஞ்சென்றவர்களான லூயிஸ் அல்பிரட், அருட்தந்தை பீற்றர் துரைரட்ணம் மற்றும் லூட்ஸ் (கனடா), பேர்னடேற் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அன்ரன் பரமநாயகம் (கனடா), ஜோய் (ஜேர்மனி), பெலிஷியா (நிறோ- கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கரோலினா (கனடா), மிஸேலா (ஜேர்மனி), ஷெரினா (கனடா), எட்றியன் (கனடா), அஸ்லின்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேத்தியும், காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம், அல்பிரட் பரராஜசிங்கம், ஜோசப் நவரட்ணம், பிரான்சிஸ் சேவியர், மேரிதிரேசா சவுந்தரநாயகி, அருட்சகோதரி ஹயசிந் (திருக்குடும்பக் கன்னியர்), மற்றும் விக்டர் இம்மானுவேல் (பிரான்ஸ்), கருணாதிராசா (கனடா), மேரி திரேசா, நேசமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராஜர் அவர்களின் அன்புச் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 22.02.2022 செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணியளவில் பாண்டியந் தாழ்வு இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு அதனை தொடர்ந்து மு.ப 10.00 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பத்தாவத்தையில் அமைந்துள்ள அவருடைய இல்லத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 03:00 மணிக்கு சேந்தாங்குளம் புனித ஆரோக்கியநாதர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
1. அருட்தந்தை எட்வினாதன் (மகன்) - 94772487800
2. அருட்சகோதரி வேஜி (மகள்) - 94773566646
3. எட்வினா (மகள்)- 0016477681808
4. ராஜினா (மகள்) - 00491794281545
5. ராஜநாதன் (மகன்) - 0016477161587

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வின் குற்றச்சாட்டில் உண்மைகள் ஏதுமில்லை

*சரத் வீரசேகர கூறுகின்றார்*



**கொழும்பு, பெப். 22**

**போர் நடந்தபோது திட்டமிட்டு வடபகுதிக்கான உதவிப் பொருள்களைத் தடுத்தோம் என்ற குற்றச்சாட்டுத் தவறானது என்று தெரிவித்துள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;

இவை அனைத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையிலிருந்தே ஆரம்பமாகின.

இந்த அறிக்கை எங்களுக்கு எதிராக 8 போர்க் குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியமை தொடர்பில் நான்கு குற்றச்சாட்டுக்கள், சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறியமை தொடர்பில் நான்கு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

நான் ஐக்கியநாடுகள் மனித உரிமை சபைக்கு தனியாகச் சென்று அந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்தேன்.

உதாரணமாகப் போரின்போது நாங்கள் திட்டமிட்டு வடபகுதிக்கான உதவிப்பொருள்களைத் தடுத்தோம் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அது தவறானது. அப்போது நான் கடற்படையில் இருந்தேன்.

வடபகுதிக்கு உதவிப்பொருள்களுடன் நூற்றுக்கணக்கான கப்பல்கள் சென்றன.

ஐ.நா. உட்பட சர்வதேச சமூகம் இலங்கையை அதற்காகப் பாராட்டியது.

இருந்தபோதும் மங்கள சமரவீர போர்க் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டார். பரணகம ஆணைக்குழுவுடன் ஆறு சர்வதேச அளவில் பெயர் பெற்ற போர்க்குற்ற நிபுணர்கள் இணைந்து செயற்பட்டனர்.

அவர்கள் அனைவரும் நாங்கள் எந்தப் போர்க் குற்றங்களையும் இழைக்கவில்லை என உறுதியாகத் தெரிவித்தனர் -என்றார். (எ-இ)



நாட்டின் வளங்களை

## பறிகொடுப்பது இலகு மீளப்பெறுவது கடினம்

விஜித ஹேரத் எம்.பி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 22

நாட்டின் வளங்களை இலகுவாகப் பறிகொடுக்கலாம். ஆனால் அவற்றைத் திரும்பப் பெறுவது எளிதல்ல என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் எஞ்சியுள்ள தேசிய வளங்களைப் பாதுகாப்பது முக்கியம்.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டன. தொடர்ந்து கெரவலப்பிட்டி அனல்மின் நிலையத்தின் முழு உரிமையும் ஐந்தாண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு 99 வருடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவை இலகுவில் மாற்றியமைக்க முடியாத ஒப்பந்தங்கள். அவற்றைத் திரும்பப் பெற வேண்டுமானால், பேச்சு நடத்தி இழப்பீடும் கொடுக்க வேண்டும் -என்றார். (வ-இ)

## மாடியிலிருந்து விழுந்தவர் உயிரிழப்பு



கொழும்பு, பெப். 22

சுற்றுலா விடுதி ஒன்றின் இரண்டாவது மாடியிலிருந்து தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பதுளை எல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

செக் குடியரசைச் சேர்ந்த 28 வயதான குறித்த நபர் தெமோதரை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-ரி1)



வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிக பனிமூட்டத்துடன் கூடிய வானிலை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் அதிகாலை வேளைகளில் போக்குவரத்தின்போது சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது என்று சாரதிகள் தெரிவிக்கின்றனர். (ம-ரி1-110)

## வாக்காளர் தின விழிப்புணர்வு

சாவகச்சேரி, பெப். 22

யாழ். தேர்தல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், 'வாக்கு எமது உரிமை அதுவே எமது பலம்' என்ற கருப்பொருளில் வாக்காளர் தின விழிப்புணர்வு நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. இதற்கமைய இன்று காலை யாழ் மாவட்டச் செயலகம், கொடிகாமம் பேருந்து நிலையம் ஆகியவற்றிலிருந்து துவிச்சக்கர வண்டிப் பேரணியும், சாவகச்சேரி சங்கத்தானை முருகமூர்த்தி கோவிலிலிருந்து நடை பவணியும் இடம் பெறும்.

இதனைத்தொடர்ந்து வாக்காளர் தின நிகழ்வுகளாக நடனம், 'நாட்டின் நாயகர்கள் வாக்காளரே', 'புள்ளடியின்பலம்' போன்ற தொனிப்பொருளில் அமைந்த கவிதைகள், விழிப்புணர்வு நாடகம், விநாடிவினாப்போட்டி ஆகியன இடம்பெற்று பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், தென்மராட்சி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம், யாழ் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ், யாழ். தேர்தல்கள் அலுவலக பிரதம முகாமைத்துவ சேவை (நிதி) உத்தியோகத்தர் க.தேவதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-ரி1-9)



## யாழ். கோட்டைப் பகுதியில் துப்புரவுப்பணி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில், யாழ். கோட்டையை சுற்றியுள்ள பகுதிகளில் துப்புரவுப் பணிகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது பெருகிவருகின்ற டெங்கு, மலேரியா போன்ற நோய்களில் இருந்து பாதுகாப்பாக இருக்கும் விதமாகவும் யாழின் முக்கிய சுற்றுலாத்தலமாக விளங்கும் யாழ். கோட்டைப் பிரதேசத்தை அழகுபடுத்தும் நோக்கத்திலும் இந்தப்பணி முன்னெடுக்கப்பட்டது.

தன்னார்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்பொருள் திணைக்கள ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இந்தத் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றன.

இந்தப் பணியானது தொடர்ச்சியாக நான்கு வாரங்களுக்கு பிரதி சனிக்கிழமைகளில் முன்னெடுக்கப்படவுள்ளதால் ஆர்வமுடைய தன்னார்வலர்கள் கலந்துகொள்ளமுடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-ரி1-125)

## ஆண்டு நிறைவும் பொதுக்கூட்டமும்

வடமராட்சி, செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் 14ஆம் ஆண்டு நிறைவு விழாவும் பொதுக்கூட்டமும் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு வடமராட்சி செவிப்புலன் அற்றோர் நிறுவன ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

தலைவர் த.செந்தில்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மாவட்டச் செயலர் க.மகேசன், வடமாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் அகல்யா செகராசா, வடமராட்சி கல்வி வலய விசேட கல்வித்திட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.விஷ்ணுகரன், வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.நிர்மலன், இலங்கை தமிழ் செவிப்புலனற்றோர் அமைப்பின் தலைவர் கோ.வள்ளிகாந்தன், கரவெட்டி தலைமைப்பீட கிராம அலுவலர் ராஜ்குமார், மருதங்கேணி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் வீரகத்திப்பிள்ளை கணேசலிங்கம், வடமராட்சி செவிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-ரி1-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 06 . 1945



மறைவு 04 . 03 . 2021

## அமரர் வெற்றிவேலு தர்மலிங்கம்

யாழ் சாவகச்சேரி சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் வெற்றிவேலு தர்மலிங்கம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் பக்தியின் இருப்பிடமாய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே !

ஆண்டு ஒன்று அகன்றோடி
விட்டது ஆனாலும் உங்கள்
நினைவுகள் அழியாது
எம் அடிமனதின் ஆழத்தில்
உங்கள் நிஜங்கள் நீண்டு
நிழலாடுகிறது !

கனிவான புன்சிரிப்புடன்
பாசம் கொண்டாடி மகிழும்
உங்கள் திருமுகம்
காணத்துடிக்கின்றோம் !

ஆண்டுகள் பல நீண்டாலும்....!
உங்கள் நினைவுகள் நீங்காது...!
உங்கள் திருமுகம் எங்களை
விட்டு மறையாது..........!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffa will entertain applications from qualified persons for the under mentioned post up to Monday, 28.02.2022.

Post of Temporary Research Assistant
"A.S.Thambiah Endowment for Research in Oncology – Faculty of Medicine, University of Jaffna"

Salary scale Rs.49,860/- (Fixed) pm

Qualifications:-

1. Basic degree in the field of healthcare with Undergraduate research experience in health research.
   - I. A First or Second class (Upper Division) in a basic degree Examination in the relevant subject.
   
   OR
   - II. A Second class (Lower Division) in a basic degree Examination in the relevant subject.
   
   OR
   - III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant subject.
   
   OR
   - IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant subject

**Note : Having research experience in the field of oncology will be preferable.**

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application forms will be available in the Faculty website **http://www. med. jfn. ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf.** Application forms downloaded from the Faculty website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: 162-1-001-6-0000880 **(Reference number should be mentioned: 970000090000387)** of Bursar, University of Jaffna.

Perfected applications shall be sent to the Senior Assistant Registrar/ Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna. Applicants are requested send the scanned copies of all the documents to the email address: fomvacancy@univ.jfn.ac.lk on or before Friday, 18.02.2022.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
21.02.2022

(cr 37125) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 06 - 1938



மறைவு 21 - 02 - 2022

## அமரர் தம்பையா சண்முகநாதன்

(இளைப்பாறிய நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)

கே.கே எஸ் வீதி இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும், காரைக்கால் வீதி இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தம்பையா சண்முகநாதன் 21.02.2022 (திங்கட்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- இரத்தினம்மா தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லையா பராசக்தி தம்பதிகளின் மூத்த மருமகனும், பூலோகநாயகியின் பாசமிகு கணவரும், சிவாகரன்(பதவிநிலை உதவியாளர்-பிரதி அஞ்சல்மா அதிபதி அலுவலகம்), சுதாகரன் (ஆசிரியர்-யா/வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்), பவித்திரா(சுகாதார முகாமைத்துவ உதவியாளர்- யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தினி, உஷாந்தினி, கிரிதரா ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலாம்பிகை, இராசமணி காலஞ்சென்றவர்களான முருகையா, இராசேந்திரம் மற்றும் சத்தியபாமா, கைலாயநாயகி (வரதா), தர்மசோதி (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கார்த்திகேசு, கணேசநாதன், இலட்சுமணநாதன் (சிவசம்பு களஞ்சியம்), காலஞ்சென்ற கைலாயநாதன் மற்றும் மகேஸ்வரி(இலண்டன்), காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், சுப்பிரமணியம், வைரவநாதன், ஆனந்தரமணி மற்றும் செல்வராணி, லீலாவதி நவரட்ணசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், தனுசன், வரகுணன் தேமதுரன், தருன்ஜன், கவிஸ்ணா, சாருண்ஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 22.02.2022 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"பூலோகம்"
[illegible] வீதி,
இணுவில்
தொ. [illegible]

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி சின்னத்துரை பார்வதி

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மன்னார் அடம்பன் மற்றும் 3 ஆம் வட்டாரம் சர்வோதய வளாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை பார்வதி கடந்த (19.02.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - கண்ணம்மா தம்பதியரின் மருமகளும், மன்னார், அடம்பன் முன்னாள் கிராமசபை உதவித் தலைவர், சமாதான நீதவான், திருக்கேதீஸ்வர நிர்வாகசபை உறுப்பினருமான காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கலாரஞ்சினி மற்றும் லோகதாஸன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திலகவதியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சின்னப்பிள்ளை, தம்பிப்பிள்ளை, கனகசபை, நமசிவாயம், அன்னபூரணம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர் களான சுப்பையா, விசுவலிங்கம், சிவக்கொழுந்து, பொன்னம்மா, நீலாம்பிகை (கிளி), கந்தையா ஆகியோரின் உடன்பிறவாதச் சகோதரியும், சஞ்சீவன், சிறிகுலன், திரிகன், சாதுசன், சாதனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் நாளை (23.02.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சர்வோதய வளாகத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட இலங்கை சர்வோதயம்,
புங்குடுதீவு 3ஆம் வட்டாரம்,

(cs 43092) (2.6)

தகவல்:
மகன் -லோகதாஸன்
(பிரான்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும்
திரு. கந்தசாமி சந்திரலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பரமேஸ்வரி கந்தசாமி**

அவர்கள் கடந்த 2022.02.18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை**

(CR 37130) (3/6)

---

**University of Jaffna**

Professor. K. Kailasanatha Kurukkal
Memorial Lecture

"The Role of
Sri Lankan Women in Enhancing
Hindu Civilization"

Speaker: Dr. (Mrs) V.Pavanesan
Head/Dept. of Saiva Siddhantha,
Faculty of Hindu Studies,
University of Jaffna.

Venue: Kailasapathy Auditorium,
University of Jaffna.

Date: 23.02.2022

Time: 3.00 p.m

All are cordially invited

Kindly follow the Precautionary Measures for COVID 19 when participating

Registrar,
University of Jaffna,
Sri Lanka.
21.02.2022

(cr.37126(2.6)

---

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-10 சந்தனமாதாகோவில் 2ம் ஒழுங்கையில் அமைந்த ஆதன இலக்கம் 36/3 ஆதனம் S.சோமசுந்தரம் என்ற பெயரில் எமது பதிவேட்டில் காணப்படுகின்றது.

இவ்வாதனத்தை இல 36 சந்தனமாதா கோவில் 2ம் ஒழுங்கை சுண்டிக்குளி யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச்சேர்ந்த குருநாதன் கைம்பெண் சற்குனேஸ்வரி என்பவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 30.07.2021 திகதியிட்ட உறுதி இல 4402 பிரகடன உறுதி மூலம் " கூளாவடியும் சமரக்குஞ்சமும்" என்ற பெயர் கொண்ட நிலப் பரப்பு இரண்டு குளி மூன்று தசம் பூச்சியம் ஏழு (2குளி 3.07) விஸ்தீரணம் கொண்ட ஆதனமானது எனது தகப்பனான சுப்பிரமணியம் சோமசுந்தரத்தின் நன்கொடை ஆதனம் என்றும் இதனை எனக்கு 1975ம் ஆண்டு நன்கொடையளித்து முறையாக எழுதப்பட்ட ஆதனம் என்றும் நாட்டில் ஏற்பட்ட போர் சூழலின் போது இடப்பெயர்வின் போது உறுதிகள் தொலைவடைந்து விட்டன என்றும் அன்றில் இருந்து தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 27.09.2021 திகதியிட்ட 4438 நன்கொடை உறுதி மூலம் தனது மகள் குருநாதன் நாமகள் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

**ஆதன விபரம்:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று அரியாலை மேற்கு இறை இது நல்லூர் பிரதேச செயலகம் பகுதியில் யாழ் மாநகரசபைக்குட்பட்ட J/93 கிராம சேவகர் பிரிவில் உள்ள "கூளாவடியும் சமரக்குஞ்சமும்" நிலப்பரப்பு இரண்டு குளி மூன்று தசம் பூச்சியம் ஏழு ( 2குளி 3.07) பழைய கட்டிடமும் கிணறும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.தேவரூபன் அவர்களால் 2021.05.01ம் திகதி 051ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட நிலஅளவைப்படத்தில் lot 01 என காட்டப்பட்டுள்ளது. இந்நிலபரப்பு 2குளி 3.07ற்கும் எல்லைகள்.

**கிழக்கு** :- குருநாதன் நாமகளின் ஆதனம்.
**வடக்கு** :- பாதை(தனியார்)
**மேற்கு** :- சந்தனமாதா கோவில் ஒழுங்கை.
**தெற்கு** :- பாலசுந்தரம் உருத்திரானந்தாவினதும் பாலசுந்தரம் தயானந்தாவினதும் ஆதனம்.

தற்போது குருநாதன் மகள் நாமகள் என்பவர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு / முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது குருநாதன் மகள் நாமகள் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வில்வலிங்கம் மணிவண்ணன்
கௌரவ முதல்வர் மாநகரசபை
18.02.2022

(cr.37122) (2.6)

---

# விஞ்ஞானச் சங்கத்தின் அறிவியல் அமர்வு

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் 28ஆவது வருடாந்த அறிவியல் அமர்வு நாளை 23ஆம் திகதி, நாளை மறுதினம் 24ஆம் திகதி, எதிர்வரும் 25ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

'நெருக்கீடுகளின்போது அறிவியல் வெற்றிக்கான அத்தியாவசிய திறன்களின் வரிசையை வெளிப்படுத்துதல்' என்னும் தொனிப்பொருளில் பேராசிரியர் செ.கண்ணதாசன் தலைமையில் அமர்வு இடம்பெறவுள்ளது.

அமர்வின் பிரதம அதிதியாக ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக சமுதாய மருத்துவ பேராசிரியர் சாமினி பிரதாபன் கலந்து சிறப்பிக்கின்றார். இந்நிகழ்வுகளில் சிறப்புப் பேருரைகள், கருப்பொருள் ஆய்வு அமர்வு மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் அமர்வு போன்றன எட்டு நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன.

பாடசாலை விஞ்ஞானப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வும் தலைவர் பேருரையும் இறுதிநாள் நிகழ்வாக இடம்பெறவுள்ளது. மேலும், 25ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளது. (ஒ-இ)

---

## வேலைக்கு ஆள் தேவை

யாழ் நகர் அண்மையில் இயங்கும் மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு ஆண் விற்பனையாளர் தேவை.

**075 090 6486**

## கணித பிரத்தியேக வகுப்புக்கள்

(தனிப்பட்ட, சிறுகுழு) **ஆங்கில, தமிழ் ஆகிய மொழிகளில்** சுழிபுரத்தில் நடைபெறும். **தரம்: 9,10, 11**

**071 449 4826, 076 796 2358**

## சாரதி தேவை

**10 சில்லு பாரவூர்தி (லொறி)**
ஓடக்கூடிய அனுபவமுள்ள சாரதிகள்
நேரில் சமுகமளிக்கவும்.

தொடர்பு :
**சிற்றிஹாட்வெயார்**
**அன்ஸ்ரோர்ஸ்**
**55,57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும்
திரு. கந்தசாமி சந்திரலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பரமேஸ்வரி கந்தசாமி**

அவர்கள் கடந்த 2022.02.18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்தார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**மயிலிட்டி உப அலுவலகம்**

(CR 37128) (3/6)

## கண்ணீர் அஞ்சலி



சங்க உறுப்பினர்
**திருமதி வாகினி பிரதீப்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி**
**சாரதாதேவி ஸ்ரீவாமதேவன்**

அவர்கள் கடந்த (13.02.2022) அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**தென்மராட்சி பிரதேச செயலகம் - சாவகச்சேரி.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட செயலக தாபன கிளையில் அலுவலகப் பணியாளராக கடமையாற்றும் திரு.நா.சூரியகுமார் அவர்களின் பாசமிகு தந்தையார்

**கதிரவேல் நாகராசா**

அவர்கள் கடந்த 2022.02.20 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.**

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியர் திரு. ச. சுதாகரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு. தம்பையா சண்முகநாதன்**

அவர்கள் நேற்று (21.02.2022) திங்கட்கிழமை காலமான செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/ வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்**

---

## விவசாயியை தீண்டிய 6அடி நாக பாம்பு

முல்லைத்தீவு, பெப். 22

உடையார்கட்டு - மூங்கிலாற்றில் கடந்த 18ஆம் திகதி வயலில் நெல் அறுவடை செய்துகொண்டிருந்த இளம் விவசாயி பாம்பு தீண்டி உயிரிழந்திருந்தார். இந்த நிலையில் அவரைத் தீண்டிய 6 அடி நாக பாம்பு நேற்று கண்டு பிடிக்கப்பட்டு அது அடித்து எரிக்கப்பட்டுள்ளது. (ஒ-19)



---

## திருடப்பட்ட...

தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் உரும்பிராயில் உள்ள வீடொன்றில் புகுந்து சிலர் மோட்டார் சைக்கிளை திருடிச்




சென்றுள்ளனர். கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், சம்பவ இடத்துக்கு அண்மையிலிருந்த சி.சி.ரி.வி. பதிவுகளை ஆராய்ந்தனர். அதன் அடிப்படையில் உடுவிலைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலுக்கு அமைய திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் கோண்டாவிலில் உள்ள காணியிலிருந்து மீட்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளாரெனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற திருட்டு, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நிலையில் தேடப்பட்டு வந்தவர் என்றும் பொலிஸார் கூறினர்.

(அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக்கொடை



யாழ்ப்பாணம், பெப். 22

அகில இலங்கை சைவ மகா சபையால், சிவவாரத்தின் ஆரம்ப நாளான இன்று குருதித்தான முகாம், யாழ். இந்துக்கல்லூரிக்கு அண்மையிலுள்ள சைவ பரிபாலன சபையில் இடம்பெறவுள்ளது.

(ம-4-125)

*மின்துண்டிப்பு...* நேரம் மின்வெட்டு நடைமுறையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம் 28 - 04 - 1930



மறைவு 21 - 02 - 2022

## மாணிக்கம் தம்பிமுத்து (கந்தையா)

சாவகச்சேரி சரசாலை தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தம்பிமுத்து (கந்தையா) அவர்கள் நேற்று (21.02.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற மாணிக்கம் சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து வேலுப்பிள்ளை, கிருஸ்ணன், அமுதம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், தவமகிந்தினி(தங்கா) அவர்களின் அன்புதந்தையும், சௌந்தர்ராஜன் அவர்களின் அன்பு மாமனாரும், ராஜமகிந்தனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மத்திய வாசிகசாலை வீதி"
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்
சௌ.ராஜமகிந்தன் (ஆசிரியர்)
077 624 0151



# University of Jaffna
## Vacancy - Post of Temporary Demonstrator - Faculty of Medicine

Applications are entertained from those who have passed the final examination of the MBBS or BSc degrees obtained in Allied Health Sciences or Biomedical Sciences from the State Universities or UGC recognized foreign Universities. (Priority will be given to the MBBS graduates. Research experience in the relevant field is preferable)

Salary Scale :Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application forms and other details are available in the Faculty of Medicine website: http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf Applications with scanned copies of all the documents should be sent on or before Monday, 28.02.2022 to the following email address: **fomvacancy@univ.jfn.ac.lk**

Prescribed application form downloaded from the website must accompany paid bank-slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

The date of the selection interview for the above post will be notified to the eligible applicants via email.

Registrar
University of Jaffna
21.02.2022

(cr.37144) (2.6)



# மரண அறிவித்தல்



## அமரநாதன் உதிஸ்ரன்

இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் றக்கா றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட அமரநாதன் உதிஸ்ரன் நேற்று (21.02.2022) திங்கட்கிழமை அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமரநாதன் மற்றும் சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும், சுஜனியின் அன்பு கணவரும் டனிக்காவின் அன்புத் தந்தையும் பிரதாபன்(அபி), கனிஸ்ரன்(கனி) ஆகியோரின் அன்பு சகோதரனும் கனகரட்ணம் வசந்தினி தம்புதியரின் அன்பு மருமகனும் கஜந்தனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.

தகவல்
தாயார்,சகோதரர்

(CS 18415)(4/10)



நீதி அமைச்சு
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை

## 2021 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டுக்கான படிவம் II அறிக்கை (பங்களிப்புத் தொகை விபரம்) சமர்ப்பித்தல்

**யாருக்கு ஏற்புடையது** — ஆர்-1 பணம் அனுப்பும் படிவத்தின் மூலம் பங்களிப்புத் தொகை செலுத்தும் தொழில் வழங்குநர்கள்

**இறுதித் திகதி** — 2022 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர்

**ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்**
- சரியாக மற்றும் தெளிவாக பூரணப்படுத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டு அறிக்கை (படிவம் II)
- சாராம்சப் பக்கங்கள்
- இணக்கக் கூற்றுக்கள்

### தங்களது விசேட கவனத்திற்கு

1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் மற்றும் 1993ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரகாரம் முழுமையான மற்றும் சரியான அறிக்கைகளை உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் அறிக்கைகளுக்கு தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்காக அறிக்கையில் குறிப்பிடப்படும் ஆறுமாத மொத்தப் பங்களிப்புத் தொகையிலிருந்து 1% தண்டப்பணமாக தொழில் வழங்குநர்களினால் செலுத்த நேரிடும் என்பதையும் தயவுகூர்ந்து கவனத்திற்கொள்ளவும்.

### அறிக்கைகளை ஒப்படைக்க முடியுமான அலுவலகங்கள்

★ பிரதான அலுவலகம்

முகாமையாளர் - அங்கத்துவக் கணக்கு பாரிய வகை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
20ம் மாடி, மெகெவர பியெஸ,
நாராஹேன்பிட்டி, கொழும்பு 05.

தொ.இல.: 0117 747216
பெக்ஸ்: 0112 369779

★ கண்டி பிராந்திய அலுவலகம் (D, E,F) உள்ள ஊ.சே.நி இலக்கங்களுக்கு

பிராந்திய முகாமையாளர் - கண்டி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
இல.79, வீடமைப்புச் செயலகம்,
யட்டிநுவர வீதி, கண்டி

தொ.இல.: 081 2232446
பெக்ஸ்: 081 2232446

★ கொழும்பு கோட்டை அலுவலகம்

ஊ.ந.பொ.நி. அலுவலகம்
இல. 85, சீ வங்கி,
ஹேமாஸ் கட்டிடம், யோர்க் வீதி,
கொழும்பு 01.

தொ.இல. : 0112 321184
பெக்ஸ் : 011 2321184

★ மாத்தறை பிராந்திய அலுவலகம் (G,H,W) உள்ள ஊ.சே.நி.இலக்கங்களுக்கு

பிராந்திய முகாமையாளர் - மாத்தறை
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
இல.63/2, காலிதாஸ் வீதி,
மாத்தறை

தொ.இல. : 041 2237607
பெக்ஸ் : 041 2231877

தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை



# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 25.01.2022 அன்று சிவபதம் அடைந்த
எங்கள் குல இதய தெய்வம்

## அமரர் இராசா பூபாலச்சந்திரன் (பூபாலப்பா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.02.2022) புதன் கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும், அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

(ne18215) (2.6)

பூபாலப்பா
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தலைவர்...

யுள்ளார்.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியான ஈ.பி.டி.பி. பற்றி பொது மக்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் எவ்வளவு படுகொலைகள் அட்டூழியங்கள் புரிந்தார் என்பதும் தெரியும். 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் பரப்புரைக்காக ஊர்காவற்றுறை சென்றபோது ஈ.பி.டி.பி. குண்டர்களால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் மூவருக்கு இரட்டை சாவுத்தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது.

பிரபாகரன் உயிருடன் சரணடைந்தார் என்று டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார். அப்படி என்றால் சரணடைந்தவர்களை நீங்கள் படுகொலை செய்தீர்களா? என்பதற்கு பதில் கூறவேண்டும். இறுதிப் போரின் போது பிரபாகரனின் படம் என காண்பிக்கப்பட்ட படத்தில் நெற்றியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் இருந்தமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பிரபாகரன் சரணடைந்திருந்தால் விசாரணை செய்திருப்பீர்கள். இலங்கை முழுவதும் பவனியாகக் கொண்டு சென்றிருப்பீர்கள். ஆனால், தற்போது இந்த விடயங்கள் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணாகவே கூறிவருகின்றீர்கள். சரணடைந்த பின்னர் கொல்லப்பட்டார் என்பது உங்கள் கருத்து. அவ்வாறு என்றால் இந்தப் போர்க்குற்றத்துக்கு யார் பொறுப்பு? இதற்கு யார் பதில் கூறுவது? அன்று இராணுவத் தளபதியாக இருந்த சரத்பென்சேகா, பிரபாகரன் ஒரு வீரன்! கடைசி வரை போராடியே மறைந்தார் என்பதைக் கூறுகின்றார். படைத்தளபதியின் கீழ் இருந்த ஓய்வுநிலை ஜெனரல் கமால் குணரட்ண என்பவர், பிரபாகரனின் கழுத்தில் இருந்த இலக்கம் ஒன்று என்ற இலக்கத்தகட்டையும் பிஸ்ரலையும் கைப்பற்றினோம் எனக்கூறியுள்ளார். அவ்வாறு என்றால் பிஸ்ரலுடனா அவர் சரணடைந்தார். ஆயுதங்கள் இல்லாமற்தான் எதிரியிடம் மண்டியிடுவதையே சரணடைதல் என்பார்கள். அவருடைய உடலை நாங்கள் புதைத்துவிட்டோமென ஒரு சிலர் கூறினார்கள். எங்கு புதைத்தோம்? யார் புதைத்தது என்பது கூறப்படவில்லை. இன்னுமொரு பகுதியினர் எரித்துவிட்டு சாம்பலை கரைத்துவிட்டோம், எறிந்துவிட்டோம் - என்றார்கள்.

பிரபாகரனின் உடலை அடையாளம் காண்பதற்காக கருணாவையும் ,தயா மாஸ்ரரையும் கூட்டிச் சென்றீர்கள். ஒருவர் கொல்லப்பட்டால் குறித்த நபர் இந்தியாவாலும் தேடப்படுகின்றார் என்றால் ஏன் அவரின் இறப்பு விசாரணை நடைபெறவில்லை.

உலங்கு வானூர்தி மூலம் கருணாவை கூட்டிச்செல்ல முடியும் என்றால் ஏன் சட்ட மருத்துவ அதிகாரியைக் கூட்டிச் சென்று இறப்புச் சான்றிதழை வழங்கவில்லை? இந்தியாவுக்கு ஒரு நீதிமன்றச் சான்றிதழை வழங்கியுள்ளீர்கள். அன்றைய காலத்தில் பிரபாகரனின் தாயும் தந்தையாரும் பனாகொட இராணுவ முகாமில் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அப்படியென்றால் ஏன் டி.என்.ஏ. பரிசோதனை செய்யவில்லை?

பிரபாகரன் எனக் காண்பிக்கப்பட்ட உடலை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒன்றில் அவர் தன்னைத் தானே மாய்த்திருக்கவேண்டும். அல்லது அவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதை வரலாறுகூறும். அதனை விடுத்து சரணடைந்தார், சடலத்தை எடுத்தோம் ,புதைத்தோம் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தால் எதற்காக பிரபாகரனின் தாயாரிடம்' பிரபாகரன் எங்கு இருக்கின்றார்?' என விசாரணை செய்தீர்கள் என்பதற்கான பதிலையும் கூற வேண்டும். அல்ஜசீரா தொலைக்காட்சிக்கும் பிரபாகரனின் தாயார் இதனைக் கூறியுள்ளார் - என்றார். (அ-ஒ-20)

## பிடிக்கப்பட்ட...

கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 21 இந்திய மீனவர்களை பருத்தித்துறை மீனவர்கள் சுற்றிவளைத்து பிடித்தனர்.

பருத்தித்துறை மீனவர்களிடம் இருந்து இந்திய மீனவர்களை மீட்ட கடற்படை அவர்களை கைது செய்து பருத்தித்துறை நீதிவான்நீதிமன்றில்முற்படுத்தினார்கள். 21 மீனவர்களையும் விளக்கமறியலில் தடுத்து வைக்க நீதிவான் உத்தரவிட்டார். இந்நிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது 21 மீனவர்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு சிறைத் தண்டனை விதித்த நீதிவான், அதனை 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்துள்ளார். (ஒ-26)

## இந்திய...

கடந்த வாரம் தெரிவித்திருந்த நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்திய மற்றும் இலங்கை பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இரு தரப்பிலிருந்தும் சுமார் 100 பேர் வரையிலேயே அனுமதிக்கப்படவுள்ளனர் என்று யாழ். மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மார்ச் மாதம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் கச்சதீவு உற்சவம் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னாயத்தக் கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றிருந்தது. இதன்போது இலங்கை பக்தர்கள் 500 பேர் மாத்திரம் உற்சவத்தில் கலந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியப் பக்தர்களையும் அனுமதிக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்திருந்தார். இதன் பின்னர் கடந்தவாரம் மயிலிட்டியில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, இந்திய - இலங்கை பக்தர்கள் எவரும் உற்சவத்துக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், மதகுருமார்கள் மாத்திரமே கலந்துகொள்வார்கள் என்றும் கூறியிருந்தார்.

இந்த நிலையில் வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள தகவலில், இந்திய - இலங்கை பக்தர்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுமதிக்கலாம் என்று தெரிவித்துள்ளது. அத்துடன் இது தொடர்பான தகவல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## ஷானியின்...

எதிராக சட்டவிரோதமான முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றமையானது, ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி பற்றிய உண்மைகளை என்றென்றும் புதைக்க அரசு முயற்சிக்கின்றதா என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார அறிக்கை ஒன்றின் ஊடாக கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் தொடர்பான மனுவில் ஷானி அபேசேகர முன்வைத்துள்ள கருத்துக்கள் தொடர்பாக ஆராய்கின்றபோது, அரசுவழமைபோன்று உண்மையை மறைத்து பொய்யை சமுகமயப்படுத்துவதற்கு தயாராகி வருவதாகத் தெரிகிறது.

தன்னுடைய விசாரணை நடவடிக்கைகளுக்கு புலனாய்வு அதிகாரிகளின் உதவி முறையாக கிடைக்காமல் போனமை, புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை வேண்டுமென்றேதடுப்பது மற்றும் விசாரணையை நிறுத்தக் கோரி அழுத்தம் கொடுத்த விவரங்கள் தொடர்பாக அந்த மனுவில் அபேசேகரவால் விரிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விவகாரத்தின் உண்மை விவரங்களை அரசு வேண்டுமென்றே மறைக்கிறது என கர்தினால் மல்கம் ஆண்டகை கூட கூறுகிறார். இன்று அரசை மட்டுமல்ல சட்டமா அதிபர் திணைக்களத்தையும் நம்ப முடியாது என்று தெரிவித்துள்ளார்கள்.

உண்மையான குற்றவாளிகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும் என்று அரசு எதிர்பார்க்கவில்லை என்பது தெளிவான விடயமாகும். இவ்வாறு வெளிப்படுத்துவதால் அது அரசுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது இப்போது தெளிவாகியுள்ளது.

அபேசேகரவின் மனுவின்படி, தேசிய புலனாய்வுச் சேவை மற்றும் இராணுவ[ புலனாய்வுச் சேவையின் சில உறுப்பினர்கள் மற்றும் சஹ்ரானின் உறுப்பினர்களுக்குமிடையிலான தொடர்பு உள்ளது என்பதும் அம்பலமாகியுள்ளது. சஹ்ரானை கைது செய்ய உதவாமல் சில வழக்குகளில் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தவறாக வழிநடத்தப்பட்டனரென வும் தெரிய வந்துள்ளது.

மேலும், ஷானி அபேசேகர மற்றும் ஏனைய அதிகாரிகள் தற்போது எதிர்நோக்கும் பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் குறித்தும் நாங்கள் உன்னிப்பாக அவதானம் செலுத்துவதுடன் அவர்களின் உயிரின் பாதுகாப்புக்கு அரசே பொறுப்பு என்பதையும் வலியுறுத்துகிறோம்.

நாட்டுக்கு முக்கிய பங்காற்றுகின்ற அரச புலனாய்வு மற்றும் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளின் கௌரவம் இவ்வாறானவர்களின் செயற்பாட்டால் இல்லாமலாக்கப்பட்டதா என்று உரிய விசாரணை நடத்துவதும் ,அதன் மூலம் கௌரவத்தை பாதுகாப்பதும் அரசின் பொறுப்பாகும் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

## மருத்துவமனைக்குள்...

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கோவில்குளம் பகுதியில் இடம்பெற்ற குழு மோதலில் காயமடைந்த பாடசாலை மாணவன் ஒருவன் வவுனியா மாவட்ட மருத்துவமனையின் விபத்து சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தான். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில், விடுதியினுள் அத்துமீறி நுழைந்த 4 பேர் , அந்த மாணவன் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழியர்கள், பொலிஸாரின் பாதுகாப்பு நடைமுறைகளையும் மீறி இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (அ-ஒ-110)

## டெங்கு...

நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு மாகாணத்திலும் இந்த இரசாயனம் தற்போது இல்லை என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடு முழுவதும் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. இந்த வருடத்தின் முதல் 51 நாள்களில் 9 ஆயிரம் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு உயிரிழப்புக்களும் டெங்குத் தொற்றால் பதிவாகியுள்ளது.

டெங்கின் புதிய திரிபால் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கின்றதா என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு சந்தேகம் வெளியிட்டிருந்தது.

கடந்த காலங்களில் டெங்கு ஒழிப்புக்காக உள்ளூராட்சிமன்றங்களுடன் இணைந்து சுகாதாரத் திணைக்களம், மருந்து விசிறும் செயற்பாட்டை முன்னெடுத்து வந்தது. மண்ணெண்ணெயுடன், ரெக்னிக்கல் மலத்தியோன் எனப்படும் இரசாயனத்தை கலந்தே இந்த விசிறல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வந்தது.

தற்போது ரெக்னிக்கல் மலத்தியோனுக்கு நாடு முழுவதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலும் இதற்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. இது தொடர்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டும் வடக்கு மாகாணத்துக்கு வழங்கப்படவில்லை. (அ-ஒ-5)

## வாக்குவாதம்...

யாழ்ப்பாணத்திலிருந்து சிற்றூர்தியில் முல்லைத்தீவு அளம்பிலுக்குச் சென்றவர்களுக்கும், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மாலை வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அதுவே பின்னர் கைகலப்பாக மாறியது.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இருவரும், அளம்பிலைச் சேர்ந்த மூவரும் காயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணத்திலிருந்து சிற்றூர்தியில் சென்ற 12பேரும், அளம்பில் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் என 13 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். தலா 2 இலட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார். (அ-ஒ-19)

## சம்பளத்துக்காக...

நாள்களில் பல்வேறு இடங்களில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் சாவகச்சேரி நகரில் யாசகம் பெற்றவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

யாசகம் பெறுபவர்களின் பணம் , குறித்த விடுதி உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டதும் யாசகத்தில் ஈடுபடுவோருக்கு தினக்கூலி வழங்கப்படுவதாக பல தரப்பினராலும் குற்றஞ்சாட்டப்பட்டது. அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-27)

## எரிபொருள்...

அதிகரிக்க வேண்டும். இவ்விரண்டையும் செயற்படுத்தாவிடின் எரிபொருள் கொள்வனவுக்கு பாதிப்பு ஏற்படும் - என்றார்.

இதேவேளை-நாட்டின் பல பகுதிகளிலும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் பல இடங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்களுக்கு

# இதுவரை இல்லாத அளவு விலை அதிகரிக்கத் திட்டம்

### ஜே.வி.பி. கடும் கண்டனம்



**கொழும்பு, பெப். 22**

**முன்னெப்போதும் இல்லாத வகையில் எரிபொருள் விலையை அதிகரிக்கவேண்டுமென்று எரிசக்தி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. இது ஏற்றுக் கொள்ள முடியாதது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம்கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியன் எண்ணெய் நிறுவனத்தை (லங்கா ஐ.ஓ.சி.) விட அதிக விலையில் எரிபொருள் விலையை அதிகரிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது. நாட்டுக்குள் இருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை அரசாங்கம் மறந்துவிட்டது. மின்சார நெருக்கடியின் பாதிப்பை அனைவரும் எதிர்நோக்கி வருகின்றனர். நிரந்தரத் தீர்வை வழங்குவதற்கு அமைச்சரவை தவறியுள்ளது. பொது மக்கள் மீதான பொறுப்பை அரசாங்கம் தவிர்த்து வருகின்றது. அடுத்த தேர்தலில் மக்கள் புதிய கட்சியொன்றை அதிகாரத்துக்குக்கொண்டு வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்-என்றார். (எ-இ)

## வெட்டிக் கொலை

கொழும்பு, பெப்.22

இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது. உயிரிழந்தவர் மொரட்டுவை கல்தெமுல்ல பகுதியைச் சேர்ந்தவர் (வயது -43) என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ள நிலையில், சந்தேகநபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)


**அறை வாடகைக்கு**

சுன்னாகம் நகரில் (உடுவில் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில்) அறை வாடகைக்குண்டு.
உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும்.

**077 129 8159**

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் இயங்கிவரும் புடைவை நிறுவனத்திற்கு பின்வரும் பணிகளுக்கு பொருத்தமான பணியாளர்கள் தேவை.

01. காட்சியறை முகாமையாளர். (முன்னனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது) -01
02. ஆண், பெண் விற்பனையாளர்கள் - 04

(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

(CS 18413) (2/4) **077 855 4840**


## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடன் நிலுவையால் நெருக்கடி

கொழும்பு, பெப். 22

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இலங்கையின் இரண்டு அரச வங்கிகளிலும் 37 பில்லியன் டொலர் கடன் உள்ளதால், மேலும் கடன் வழங்கவேண்டாமென இரண்டு அரச வங்கி களுக்கும் இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நீண்டகாலமாக கடனுக்கு எரிபொருளை விற்பனை செய்வதே இந்த நிலைமைக்குக் காரணம். இலங்கை மின்சார சபை 8 ஆயிரம் கோடி ரூபாவும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 6 ஆயிரத்து 300 கோடி ரூபாவும் கடனாகப் பெற்றுள்ளன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் துக்குப் பணத்தை செலுத்தாத காரணத்தால் கூட்டுத்தா பனம் கடனாளியாகியுள்ளது. இதன் காரணமாக அந்த நிறுவனங்களுக்கு கடனுக்கு எரிபொருள் விநியோகிக்கின்றமை நிறுத்தப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

## பொருளாதார அறிவின்றி விமர்சிக்கின்றார்களாம்!

### நாலக கொடஹேவா கூறுகின்றார்



கொழும்பு, பெப். 22

பொருளாதாரம் தொடர்பில் எதுவும் தெரியாதவர்களே, கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் அபிவிருத்திப் பணிகள் எதற்கென கேள்வி எழுப்புகின்றனர் என்று தெரிவித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

உழைப்பவர்களின் கரங்களுக்குப் பணத்தைக்கொண்டு சேர்ப்பதையே அரசாங்கம் செய்கின்றது. கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியிலும், நாட்டில் தொடர்ந்து அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டில் உணவுக்கு வழியில்லாதிருக்கும் நிலையில் அபிவிருத்தித் திட்டங்கள் தேவையா என விமர்சிக்கின்றனர்.

பொருளாதாரக் கல்வி தொடர்பில் எந்தவிதமான அறிவும் இல்லாதவர்களே இதுபோன்ற கேள்விகளை கேட்கிறார்கள். அரசாங்கத்திடம் உள்ள பணத்தை தானம் பண்ணுவதைவிட அந்தப் பணம் உழைப்பவர் களின் கரங்களுக்கு செல்வதையே அரசாங்கம் திட்டமிடு கிறது. இதுவே பொருளாதார நியாயம். அதைப்புரிந்து கொள்ளாதவர்களே விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர் - என்றார். (எ-இ)


அமரர் வே. அன்பழகன் அவர்களின்
அன்பொளி கல்வியகத்தின்
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2022
மாணவர்களுக்கான "PAPER CLASS" ஆரம்பமாகின்றன.
"விசேட வழிகாட்டல் பரீட்சைகள்"

"தனித்துவமான தெளிவான நுட்பங்களுடனான விளங்கப்படுத்தல்"

ஆசிரியர்கள்

திரு.ப.பத்மநேசன் யா/மகாஜனாக்கல்லூரி

திரு.என்.எஸ்.தீபன் யா/மீசாலை வீரசிங்க ஆரம்ப வித்தியாலயம்

* ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விசேட வழிகாட்டல் பரீட்சையும். வினாத்தாள் விளக்கமளித்தலும் நடைபெறும்.
* ஆசிரியர்கள் இருவரினாலும் தயாரிக்கப்பட்ட தனித்துவமான வினாத்தாள்கள் பரீட்சைக்காக வழங்கப்படும்.
* பரீட்சைப் புள்ளிகள் வாரந்தோறும் வெளியிடப்படும்.

ஆரம்பம் 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 – 10.30.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இயக்குநர்

(CS 43095) (2.6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 12 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. 14 அடிப்பதையுடன் நிலப்பரப்பு இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் A32 பிரதான வீதியில் இருந்து 500M தூரம் பயன்தரும் தென்னைகள் உள்ளன. நீர் பாய்ச்சல் வசதிகள் உள்ளன. (பைப் லையின்) பார்வையிடும் நேரம். காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

ஒரு பரப்பின் விலை 350 000/-

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு **077 814 7389** **077 117 8578**

(CS 43096) (3/6)

**45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு**

**இடை நிறுத்தம்**

கடந்த (08.01.2022) சனிக்கிழமை
அமெரிக்காவில் சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி
அமரர் திருமதி
**சண்முகரத்தினம் புஸ்பராணி (பேபி)**
அவர்களின் 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய
கிரியைகள் நாளை (23.02.2022)
புதன்கிழமை நடைபெற இருந்தது இந்நிகழ்வு
தவிர்க்கமுடியாத காரணத்தால்
**இடைநிறுத்தப்படுகிறது**
என்பதனை அனைவருக்கும்
அறியத்தருகின்றோம்.

இல.43, கலட்டி முந்தல் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (cs.43055) (2.6)

முத்துவேலு சண்முகரத்தினம்
குடும்பத்தினர்


## ஜனாதிபதி செயலகத்தில் கட்டமைப்புகள் மாற்றம்!

கொழும்பு, பெப். 22

ஜனாதிபதியின் செயலாளராக காமினி செனரத் பதவி யேற்றதைத் தொடர்ந்து, ஜனாதிபதி செயலகத்தில் பல மாற்றங்கள் கட்டமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் பணிகளை மேலும் வினைத்திறன் மிக்கதாக மாற்றும் நோக்கில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், ஜனாதிபதி நிதியம், மக்கள் தொடர்புப் பிரிவு உள்ளிட்ட மக்களுக்கு நேரடியாக சேவைகளை வழங்கும் பிரிவு களின் பதவிகளுக்குப் புதிய அதிகாரிகள் நியமிக் கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஜனாதிபதி புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னர், மேற்கொள்ளப்படும் நிர்வாக ரீதியிலான மாற்றங்களின்போது பெயர்களைக் குறிப்பிட்டு, தவறான அர்த்தப்படுத்தல்களை வெளிப்படுத்த சில சமூக ஊடகங்கள் முயற்சிக்கின்றன என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அவை உண்மைக்குப் புறம்பானவை எனவும் விளக்கமளித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.